Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 22 வியாழக்கிழமை (06.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 231

# வன்முறையற்று இடம்பெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல்



## நாடு முழுவதும் வாக்களிப்பு சுமுகம்

(கொழும்பு)
இலங்கையின் 9ஆவது பாராளு மன்றப் பொதுத் தேர் தலில் எந்தவிதமான ▷23

## யாழ்ப்பாணத்தில் 74.27% வாக்குப் பதிவு

(யாழ்ப்பாணம்)
பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்ற நிலையில் யாழ்ப் ▷23

## முல்லையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர்


▷23

# 70% வடக்கு - கிழக்கில் வாக்களிப்பு



## தமிழர் பகுதிகளில் கடந்த முறையுடன் ஒப்பிடுகையில் அதிகளவு வாக்களிப்பு

(யாழ்ப்பாணம்)

**பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்ற நிலையில், வடக்கு - கிழக்கில் 70 சதவீத வாக்களிப்பு நடைபெற்றது.**

**கடந்த முறை பாராளுமன்றத் தேர்தலை ஒப்பிடும்போது இம்முறை அதிகளவான வாக்குகள் பதிவாகியுள்ளன.**

இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு மாலை 5 மணியுடன் முடிவுக்கு வந்திருக்கிறது.

காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்களிப்பு, மாலை 5 மணியுடன் நிறைவுக்கு வந்துள்ளதை யடுத்து, வாக்குப் பெட்டிகளை முத்திரையிட்டு, அவற்றை வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

இந்த தேர்தலில், நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் வடக்கு-கிழக்கில் தமிழர் பகுதிகளில் ▷23

## இதுவே எனது இறுதி ஊடக சந்திப்பு மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)
தாம் கலந்து கொள்ளும் இறுதி ஊடக சந்திப்பு இது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். ▷23

## அசம்பாவிதங்கள் இன்றி யாழில் அமைதியான முறையில் வாக்களிப்பு அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)
நடைபெற்று முடிந்துள்ள பாராளுமன்றத் தேர் தலுக்கான வாக்களிப்பு ▷23

## சாவகச்சேரியில் கள்ள வாக்கு

### சாவ.நகர சபைத் தவிசாளரின் கணவரின் வாக்கை ஏற்கெனவே ஒருவர் செலுத்தியதால் பரபரப்பு

(சாவகச்சேரி)
யாழ்.தேர்தல் மாவட்டத்தில் உள்ள சாவகச்சேரி தொகுதியில் கள்ள வாக்கு பதிவு செய்யப் பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் குறித்த தொகுதியில் வாக்களிக்க வந்தவர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருகையில், ▷23

## வாக்குகள் எண்ணும் பணி இன்று காலை ஆரம்பம்

### வன்முறைகள் அற்ற தேர்தலாகவும் பதிவு

(கொழும்பு)
நேற்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வாக்குகள் எண்ணும் பணி இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. ▷23

## நாடு முழுவதும் 70% வாக்குப் பதிவு

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)
2020 பொதுத் தேர்தலில் நாடு முழுவதும் 70 சதவீத வாக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் ▷23

## யாழைச் சேர்ந்த பெண் பிரான்ஸில் பலி



## 5 மணித்தியாலத்தில் 421 தேர்தல் முறைப்பாடு பதிவு

(கொழும்பு)
தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 5 மணித்தியாலத்தில் 421 முறைப்பாடுகள்பதிவு ▷23

## இறுதி நேரத்தில் வாக்களித்த சஜித்

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அதன் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ இறுதி தருணத்தில் வாக்களிப்பு ▷23

## கொரோனா சந்தேகத்தில் சுயதனிமையில் இருந்தவர்கள் இரகசியமாக வாக்களிப்பு

(பொலநறுவை)
பொலநறுவை - லங்காபுர பகுதியில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த லங்காபுர பிரதேச சபையின் தலைவரும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும் ரகசியமாக வாக்களிப்புக்குச் சென்ற ▷23

# திருமண ஆடையுடன் சென்று வாக்குப்பதிவு செய்த புதுமணத் தம்பதி



(கொழும்பு)

இலங்கையில் திருமணம் செய்தவுடன் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக சென்ற தம்பதியின் புகைப்படம் இணையத்தில் பிரபல்யம் அடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் பன்னல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

திருமண ஆடை அணிந்த நிலையில் இந்த தம்பதி தங்கள் வாக்கினை வழங்கியுள்ளனர். விசாரத தினேஸ் உதயசிறி மற்றும் சமல்கா விஜேசிங்க ஆகிய தம்பதியே இவ்வாறு வாக்களித்துள்ளனர்.

பன்னல, கொட்டுவெல்ல சுதர்சனாராம விகாரையில் குறித்த தம்பதி வாக்குப்பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்பதாவது பாரளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவு செய்யும் வாக்களிப்பு நேற்று நாடு பூராகவும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# எமது சுகாதாரப் பாதுகாப்பு மீது நம்பிக்கை வைத்த வாக்காளர்களுக்கு நன்றி

## ஜனாதிபதி கோட்டா டுவிட்



(கொழும்பு)

எமது சுகாதார பாதுகாப்பு முறைமை மீது நம்பிக்கை வைத்த வாக்காளர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

டுவிட்டரில் பதிவொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது.

இன்று (நேற்று) (05) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சுமார் 71 % வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

கோவிட் -19 அச்சுறுத்தல் உலகில் இருந்து நீங்காத இந்த சந்தர்ப்பத்தில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்திய தெற்காசியாவின் முதலாவது நாடாக பொது மக்கள் எமது சுகாதார பாதுகாப்பு முறைமை மீது வைத்த நம்பிக்கைக்கு நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# புலோலியில் கத்திவெட்டு; இளைஞன் படுகாயம்

(கரணவாய்)

பருத்தித்துறை வராத்துப்பளைப் பகுதியில் இடம்பெற்ற கத்தி வெட்டில் விரல் துண்டிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை (03) இரவு புலோலி வராத்துப்பளைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் தும்பளைப் பகுதியைச் சேர்ந்த யோகனந்தன் ஜெயராஜ் (வயது- 35) என்ற இளைஞர் படுகாயம் அடைந்தார்.

வராத்துப்பளைப் பகுதியில் இவர் நின்றிருந்த வேளை இவர் மீது கத்தி வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.


இதில் அவருடைய விரல் துண்டிக்கப்பட்டுள்ளது. துண்டிக்கப்பட்ட விரல் அப்பகுதியில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3-60)

# குப்பிழானில் பெண்ணைத் தாக்கி 2 பவுண் நகை மற்றும் கைத்தொலைபேசி கொள்ளை

(குப்பிழான்)

குப்பிழான் தெற்கு குசாம்புலம் பகுதியில் தனித்திருந்த 62 வயதான பெண்மணியின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் குறித்த பெண்ணைக் கடுமையாகத் தாக்கியதுடன் வீட்டு அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இரண்டு பவுண் பெறுமதியான தங்க நகைகளையும், கையடக்கத் தொலை பேசியொன்றினையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகள் மேற்கொண்டனர். (ம-3-18)

# மரண அறிவித்தல்



## தம்பிப்பிள்ளை சிற்சபேசலிங்கம்

பிறப்பு
05.05.1945

இறப்பு
05.08.2020

ஏழாலையை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சிற்சபேசலிங்கம் அவர்கள் நேற்று புதன்கிழமை (05.08.2020) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-இலக்குமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் தவமணியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், Dr.காயத்திரியின் (யாழ்.போதனா வைத்தியசாலை) தந்தையும் தனஞ்ஜெயனின் (LOLC- வவுனியா - கணக்காளர்) மாமனாரும் அபிஜித், ஸ்ரீ கிருஷ்ணிகா, சர்வாங்கன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, ஜனகேஸ்வரி, குகனேஸ்வரி மற்றும் கணநாதலிங்கம், ஈஸ்வரலிங்கம், கௌரீஸ்வரி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.08.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3484)

இல. 77/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
தனஞ்ஜெயன்
காயத்திரி

021 222 8825

# இன்சுலின் ஊசி பாவனைக்குரிய நுட்பமான பயிற்சி முறைகள்

நீரிழிவு பிரதானமானதொரு தொற்றா நோயாகும். நீரிழிவு நோயின் தாக்கமானது அபிவிருத்தியடைந்த நாடுகளில் மாத்திரமல்லாது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிலும் அதிகரித்து வருகின்றது.

நீரிழிவு என்னும் நிலை ஏற்படுவதற்கு காரணமாக அமைவது உடலில் இன்சுலின் எனும் ஓமோனின்உற்பத்திகுறைவடைதல் அல்லது அதன் செயற்பாட்டில் ஏற்படும் குறைபாட்டின் காரணத்தினாலாகும்.

**இன்சுலின் (Insulin)**

இந்த மருந்து பாதுகாப்பான மற்றும் பயனுள்ளதாக இருக்கும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை எடுக்கும் போது ஒரு தவறு நடந்தால் தீவிர விளைவுகளை ஏற்படுத்தும். நீங்கள் இந்த மருந்தை பற்றி தெரிந்து கொள்வதும், அதை சரியான பரிந்துரைகளின் படி எடுத்துக் கொள்வதும் மிக அவசியமானதாகும்.

**இன்சுலின் பேணும் முறை**

• இன்சுலின் குப்பிகளை குளிரூட்டியின் நடுப் பகுதியில் (Middle Compartmemt) 2-8°c இடையில் வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

• குளிரூட்டியில் வைக்கும் போது உறையும் குளிரூட்டி பகுதியிலோ (Defreezer) , குளிரூட்டியின் கதவிலோ வைத்து பேணக்கூடாது..

• குளிரூட்டி வசதி இல்லாத நோயாளிகள் இன்சுலின் குப்பிகளைக் களஞ்சியப்படுத்த புதிய மண்குடம் ஒன்றினுள் அரை வாசிக்கு குளிர்ந்த நீரை நிரப்பி,அதனுள் சிறிய மண் சட்டி ஒன்றினை இட்டு அதற்குள் இன்சுலின் போத்தலை



வைத்துப் பேணலாம். (30 நாட்களுக்கு மட்டும்)

• மருந்து காலாவதியாக இருப்பின் பாவிக்க வேண்டாம்.

• சூடான இடங்களில் வைப்பதைத் தவிர்க்கவும்

**இன்சுலின் பாவனை முறை**

இன்சுலினை பயன்படுத்தும் போது பின்வரும் அடிப்படை விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

01. ஊசி ஏற்றுவதற்கான சரியான கருவியைத் தெரிவு செய்தல்

02. ஊசி ஏற்றுவதற்கான இடத்தை தெரிவு செய்தல்

03. சரியான அளவு மருந்தை எடுத்தல்

04. ஊசி ஏற்றுவதற்கான சரியான நுட்பத்தை கையாளுதல்

01) ஊசி ஏற்றுவதற்கான சரியான கருவியைத் தெரிவு செய்தல்

• சிரிஞ்ச் (Syringe) மற்றும் ஊசி (Needle)-31G உடைய ஊசியுடன் 1ml ஐ 100 ஆகப் பிரிக்கப்பட்ட சிரிஞ்சும் பயன்படுத்தப்படுகின்றது.

• இன்சுலின் பேனா ( insulin pen) மற்றும் இன்சுலின் பேனா ஊசி ( insulin pen needle) - 31 G உடைய ஊசி. நீளம் 4-6 mm

ஊசியை ஒரு தடவை மட்டும் பாவித்தல் சிறந்தது (அல்லது 3 தடவைகள் மட்டும்) ஊசி முனையில் இரத்தக்கறை இருந்தாலோ / முனை மழுங்கி இருந்தாலோ ஊசியை எறியவும். ஊசியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

02. ஊசி ஏற்றுவதற்கான இடத்தை தெரிவு செய்தல்

• இன்சுலின் தோல் மற்றும் தசை அடுக்கிடையே உள்ள கொழுப்பு திசுக்களின் உட்செலுத்தப்பட வேண்டும்.

• ஊசி ஏற்றுவதற்கான இடங்கள் கையின் மேற்புறம், வயிற்றுப் பகுதி, தொடை, பிற்பகுதி

• உங்கள் மருத்துவரின் பரிந்துரையின் படி இன்சுலின் போடும் இடத்தை தெரிவு செய்ய வேண்டும். ஊசி ஏற்றும் இடத்தை ஒரு மாதத்திற்கு ஒரு முறையில் மாற்றி அமைக்க வேண்டும்.

03. சரியான அளவு மருந்தை எடுத்தல்

• நோயாளிக்கு மருத்துவரின் ஆலோசனைக்கு ஏற்ப சரியான அளவு மருந்தை ஏற்றுதல் வேண்டும்.

• உங்கள் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் இன்சுலினை நிறுத்த வேண்டாம்.

ஊசியில் சரியான அளவு மருந்து எடுக்கப்பட்டு அதனுள் காற்றுக்குமிழிகள் இல்லை என உறுதி செய்தல் வேண்டும்.

04. ஊசி ஏற்றுவதற்கான சரியான நுட்பத்தை கையாளுதல்.

• ஊசி ஏற்ற பொருத்தமான இடத்தை தெரிவு செய்து சவர்க்காரம், நீர் கொண்டு அந்த இடத்தை சுத்தம் செய்யவும். (ஸ்பிரிட் தோலை கடினமாக்கலாம்)

• மேற்தோலினுள் ஊசி ஏற்றப்பட வேண்டும். ஊசியை $45^0$ இல் வைத்து ஏற்றுதல் வேண்டும்.போடும் இடத்தை இருவிரல் கொண்டு உறுதியாக பிடித்தவாறு குறுகிய நேரத்தினுள் ஊசியை ஏற்ற வேண்டும்.

இன்சுலின் போன வாயின் $90^0$ இல் வைத்து செங்குத்தாக ஏற்றவும்.

• இரத்தக் கசிவு ஏற்படின் மெதுவாக ஒரு சில நொடிகள் ஊசி ஏற்றிய இடத்தின் மீது அழுத்தவும்.

**வலியைக் குறைக்க**

• மழுங்கலான முனையுடைய ஊசியினை பயன்படுத்த கூடாது.

• குளிரூட்டியில் இருந்து இன்சுலின் குப்பியை எடுத்ததும் உள்ளங்கையில் வைத்து சில நிமிடங்கள் உருட்டவும். இதனால் குளிர் குறைந்து வலி குறையும்.

• குறுகிய நேரத்தினுள் ஊசியை ஏற்ற வேண்டும்.

• ஊசியினுள் (சிறிஞ்சியினுள்) வளிக்குமிழ் இல்லை என்பதை உறுதிப்ப டுத்தவும்.

**பக்கவிளைவுகள் (Adverse effects )**

இன்சுலின் பாவனையின் மிக முக்கிய பக்கவிளைவு குறைந்த இரத்த குளுக்கோசின் அளவு ஆகும்.

நீங்கள் இன்சுலின் போட்டபின் சரியான நேரத்தில் சாப்பிடவில்லை என்றாலும் வெறும் வயிற்றில் மது அருந்தினாலும் இரத்த குளுக்கோசின் அளவு குறையும். இதனை இயன்றஅளவு குறைக்கநோயாளிக்கான உணவு தயாரா என்பதை உறுதிப்படுத்தவும். ஊசி ஏற்றி 30 நிமிடங்களுக்குள் உணவு உட்கொள்ள வேண்டும்.

**குறைந்த இரத்த குளுக்கோசின் அறிகுறிகள்**

தலைசுற்றல், வியர்வை, படபடப்பு,மங்கலான பார்வை நடுக்கம் என்பவை ஏற்படலாம். அவ்வாறு ஏற்பட்டால் இனிப்பு அல்லது சீனியை வாயில் இடவும்.

**அனுஷா அரசிளங்குமாரன்**
**உள்ளக பயிலுநர்,**
**மருந்தாளர்,**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**



## பாரிய வெடிப்புச் சம்பவம்

# லெபனானுக்கு உலக நாடுகள் உதவிக்கரம்

(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஏற்பட்ட பாரிய வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, உலக நாடுகள் முன்வந்துள்ளன.

அயல் நாடான லெபனானுக்கு மருத்துவ உதவி வழங்கத் தயாராக இருப்பதாக சைப்ரஸ் அறிவித்துள்ளது.

இதேவேளை, பாரிய குண்டு வெடிப்பில் லெபனானுக்கு மருத்துவ உதவி அனுப்பவும் காயமடைந்த மக்களுக்கு சிகிச்சையளிக்கவும் ஈரானின் ஜனாதிபதி முன்வந்துள்ளார்.

மலேசிய வெளியுறவு அமைச்சர் ஹிஷாமுதீன் ஹுசைன் தனது நாட்டின் வருத்தத்தை வெளிப்படுத்தினார்.

மேலும் எங்களால் முடிந்த எந்தவகையிலும் உதவுவதாக தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'லெபனான் மக்களுடன் எங்களுக்கு நல்ல உறவு உள்ளது. நாங்கள் உதவ அங்கு இருப்போம்.

இது ஒரு பயங்கரமான தாக்குதல் போல் தெரிகிறது' என ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள துறைமுகத் தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாரிய வெடிப்பு சம்பவத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100ஐ கடந்தது. மேலும், நான்காயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தார் என்று அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

பெய்ரூட்டில் ஏற்பட்ட பாரிய வெடிப்பில் இறந்தவர்களில் குறைந்தது இரண்டு பிலிப்பைன்ஸ் நாட்டவர்களும் அடங்குவதாக லெபனானில் உள்ள பிலிப்பைன்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# கொரோனாவால் சிறார்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்

(ஜெனீவா)

உலகம் முழுவதும் கொரோனா தொற்று பரவி இருப்பதால், 12 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு, அவர்களுடைய கல்வி கற்றல் தொடர்பான செயற்பாட்டில் அவசியப்படும் குவி கவனமும், அவர்களின் உளவியல் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

இன்றைய திகதியில் உலகம் முழுவதும் ஏறக்குறைய 2 கோடி மக்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அறிகுறியற்ற கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டு இருப்பதாகவும், அவர்களின் மூலமாகவே பெரியவர்களுக்கு நோய்த் தொற்று ஏற்படுவதாகவும் மருத்துவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்பிற்குள்ளாகும் 12 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு அவர்களுடைய உளவியல் வளர்ச்சியில் தேக்க நிலை அல்லது இடையூறு ஏற்பட்டிருப்பதாகவும், அவர்களின் கல்வி தொடர்பான செயற்பாட்டில் ஒருமுக கவனத்துடன் செயற்படாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கண்டறிந்திருக்கிறார்கள்.

பாடசாலை வளாகங்களில் அமைக்கப்பட்டிருக்கும் வகுப்பறைகளில் அமர்ந்து கல்வி கற்ற அவர்களுக்கு, அத்தகைய தொடர்ச்சியான நடவுக்கைக்கு தற்போது கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் கவனச் சிதறலுக்கு ஆளாகி இருப்பதாக மருத்துவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.




அவர்களுக்கு கல்வி கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தவும், கல்வி கற்பித்தல் தொடர்பான தொடர்ச்சியான நடவடிக்கையின் மாற்று வடிவமாக கருதப்படும் ஒன்லைன் மூலமான கல்வி கற்பித்தலை அவர்களால் முழுமையாக ஏற்றுக் கொண்டு, எதிர்வினையாற்ற முடியவில்லை என்றும் கண்டறிந்திருக்கிறார்கள்.

இவ்விரண்டு பாதிப்பிற்கும் இவர்கள் உரிய நேரத்தில் முறையான உறக்கத்தை கடைப்பிடிக்காததே காரணம் என்றும் கண்டறிந்திருக்கிறார்கள்.

எனவே 12 வயதுக்குட்பட்ட சிறார்களின் உறக்க சுழற்சியை, பெற்றோர்கள் தொடர்ந்து ஆரோக்கியமான முறையில் பராமரிக்க வேண்டும் என மருத்துவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இதன் மூலம் அவர்கள் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பின் பக்க விளைவுகளிலிருந்து மீள இயலும் என்றும், சிலரை இத்தகைய பாதிப்பிற்கு முன்னரே தடுக்க இயலும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். (ஜ-4)

# ஒரு கடி... ஒரு உதை; தன்னை விட இரண்டு மடங்கு பெரிய முதலையிடமிருந்து தப்பித்த வரிக்குதிரை



(நைரோபி)

தன்னைவிட இரண்டு மடங்கு நீளமானதும், எடையை கொண்டதுமான முதலையிடம் சிக்கிய வரிக்குதிரையொன்று, தப்பித்த ஆச்சரிய புகைப்படங்கள் இணையத்தளங்களில் வைரலாகி வருகிறது.

பின்னங்காலால் முதலையின் தாடையில் ஒரு உதை முதலையின் முகத்தில் ஒரு கடி என இரண்டு அஸ்திரங்களை பாவித்து குதிரை தப்பித்தது.

தெற்கு கென்யாவின் மாரா நதியில் இந்த சம்பவம் நடந்தது. (ஜ-8)

# மக்களுக்கு பசில் வாக்குறுதி

(கொழும்பு)

மக்களின் ஆதரவில் பொது ஜன பெரமுனவின் தலைமையில் அரசாங்கம் உருவாக்கப்படும்போது மக்களின் நலன்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கப்படுமென அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை மதியம், தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றியப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது. "வரலாற்றில் முதல் தடவையாக சிறந்த அரசியல் கட்சியொன்று உருவாக்கப்பட்டது.

மேலும் குறித்த கட்சி குறுகிய காலத்திலேயே மக்களின் ஆதரவை பெற்று ஆட்சிக்கு வந்தமை இலங்கை வரலாற்றில் முக்கிய விடயமாகும்.

மக்களின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட எமது கட்சி நடைபெறுகின்ற தேர்தலில் வெற்றியடைந்து ஆட்சியமைத்தால், மக்களின் நலன்களுக்கு மாத்திரமே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# இணக்கப்பாட்டு அரசியலின் மூலம் உச்சபட்ச அபிலாஷைகளை பெறலாம்


## நஸீர் கூறுகிறார்

(ஏறாவூர்)

இணக்கப்பாட்டு அரசியலின் மூலம் சிறுபான்மை சமூகங்களின் உச்சபட்ச அபிலாஷைகளை பெற்றுக் கொள்வதில் வெற்றி காண முடியும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் வாக்களித்து விட்டு அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் எந்தத் தரப்பு கூடுதல் உறுப்பினர்களைப் பெற்று அரசாங்கத்தை அமைத்துக் கொண்டாலும் அந்தத் தரப்புடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து சிறுபான்மை இனங்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதே எமது நோக்கமாகும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)



# வாக்குப்பெட்டிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் இடம்பெற்ற நிலையங்களில் இருந்து வாக்குப்பெட்டிகளை பாதுகாப்பான முறையில் பொதியிடப்பட்ட வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன.

வாக்குப் பெட்டிகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வாக்குப் பெட்டிக்கும் ஆயுதமேந்திய அதிகாரியின் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

மேலும், வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படும் அனைத்து வழித்தடங்களிலும் ஆயுதமேந்திய பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஜ-4)

# இராசிபலன்

06.08.2020
ஆடி 22, வியாழக்கிழமை
திருதியை பின்னிரவு 12.21 மணிவரை
சதயம் பிற்பகல் 12.16 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
.சந்திராஷ்டமம்: பூசம், ஆயிலியம்

வளவன்


**மேஷம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**ரிஷபம்**
தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.


**மிதுனம்**
உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம், வழிபாடு மகத்துவம் தரும்.


**கடகம்**
மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும்.


**சிம்மம்**
புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**கன்னி**
கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள்.


**துலாம்**
நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


**விருச்சிகம்**
பயணங்களால் பலனுண்டு, இல்லத்தில் மங்கள நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும்.


**தனுசு**
மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு.


**மகரம்**
தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**கும்பம்**
ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.


**மீனம்**
வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைக் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**உலக வாழ்க்கை ஒரு தொடர் அன்பு ஓட்டம்**

# அம்பாறையில் மந்தகதியில் இடம்பெற்ற வாக்களிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு சுமுகமாகவும் மந்த கதியிலும் இடம்பெற்றது.

குறிப்பாக திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அம்பாறை, பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை ஆகிய தேர்தல் தொகுதிகளிலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் குறைந்தளவில் வாக்காளர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் 7 ஆசனங்களுக்காக 20க்கும் அதிகமான அரசியல் கட்சிகளும் பல சுயேட்சைக்குழுக்களும் களமிறங்கியுள்ளன.

மேலும் சுதந்திரமானதாகவும் நடுநிலையாகவும் தேர்தல் நடைபெறுவதற்கான சகல நடவடிக்கையும்தேர்தல்திணைக்களம் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# சுஷாந்தின் மரண வழக்கு சி.பி.ஐக்கு மாற்றம்

(டில்லி)

பொலிவுட் நடிகர் சுஷாந்த் சிங் ராஜ்புதின் மரணவிவகாரம் குறித்த வழக்கை விசாரணை செய்ய சி.பி.ஐக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையை மத்திய புலனாய்வு அமைப்பு மேற்கொள்ள வேண்டும் என பீகார் அரசு விடுத்த கோரிக்கைக்கு இணங்க மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



எம்.எஸ். டோனி படம் மூலமாக பிரபலமடைந்த சுஷாந்த் சிங் ராஜ்புத் அண்மையில் தற்கொலை செய்து கொண்டார். இவரது தற்கொலைக்கு ஹிந்தி சினிமாவில் நிலவும் வாரிசு அரசியலும், சுஷாந்த் சிங்கிடம் இருந்து சிலர் பட வாய்ப்புகளை தட்டிப்பறித்ததுமே காரணம் எனக் கூறப்பட்டது. இதேவேளை சுஷாந்த் சிங்கின் காதலியான ரியா சக்ரவர்த்தி மற்றும் சிலர் சுஷாந்த் சிங்கிற்கு மன ரீதியாக தொல்லை கொடுத்ததாகவும் அவருடைய தந்தை குற்றஞ் சாட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அவருடைய மரண விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போது இந்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ. மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# தமிழக ஆளுநர் நலமுடன் உள்ளார்

(சென்னை)


கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஆளுநர் பன்வாரிலால் புரோகித் நலமுடன் உள்ளார் என்று மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

சென்னை கிண்டியிலுள்ள தமிழக ஆளுநர் மாளிகையில் உள்ள பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் உட்பட 84 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆளுநர் மாளிகையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 38 பேருக்கு நடத்தப்பட்ட சோதனையில் மேலும் 3 பேருக்குக் கொரோனாப் பாதிப்பு இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்து ஆளுநர் பன்வாரிலாலுக்கு வழக்கமான மருத்துவ பரிசோதனை செய்ததில் நலமுடன் உள்ளதாகவும் 7 நாள் தனிமைப்படுத்தப்படவும் மருத்துவர்கள் அறிவுறுத்தினர். மருத்துவர்களின் அறிவுறுத்தலை ஏற்று ஆளுநர் தன்னைத்தானே தனிமைப் படுத்திக் கொண்டார்.

தனியார் வைத்தியசாலையில் கொரோனாப் பரிசோதனை மேற்கொண்டதில் ஆளுநர் பன்வாரிலாலுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



இந்நிலையில் அறிகுறிகள் இன்றி நலமுடன் இருக்கும் ஆளுநரை மருத்துவக்குழு தொடர்ந்து கண்காணித்து வருவதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (ஐ-4)

# ஒரே இரவில் செல்வந்தரானவருக்கு மீண்டும் அடித்த அதிர்ஷ்டம்

(தன்சானியா)

கடந்த ஜூன் மாதம் 3.4 மில்லியன் டொலர் பெறுமதியான டன்சானைட் இரத்தினக் கற்களை கண்டறிந்து ஒரே இரவில் பெரும் செல்வந்தரான தன்சானிய நாட்டு சிறு சுரங்க முதலாளி மற்றொரு இரத்தினக் கல்லை 2 மில்லியன் டொலருக்கு விற்றுள்ளார்.

அவர் கண்டறிந்திருக்கும் அந்த அரிதான இரத்தினக் கல் 6.3 கிலோகிராம் எடை கொண்டதாகும்.

வடக்கு தன்சானியாவில் மாத்திரம் கிடைக்கும் டன்சானைட் இரத்தினக் கல் ஆபரணங்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.


இந்த இரத்தினக் கற்கள் அடுத்த 20 ஆண்டுகளில் முழுமையாகத் தீர்ந்துவிடும் என்று புவியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

30 க்கும் அதிகமான குழந்தைகளின் தந்தையாக இருக்கும் லசிர் என்ற அந்த இரத்தினக் கல் முதலாளி, தற்போது கிடைத்திருக்கும் பணத்தை பயன்படுத்தி பாடசாலைகள், வைத்தியசாலைகள், கட்ட உதவவிருப்பதாக தெரிவித்துள்ளார். (ஐ-4)

# கடலட்டை பிடிக்கத்தடை கோரிய மனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

**நீதிமன்ற உத்தரவை மீறி வடமராட்சி கடற்பரப்பில் கடலட்டை மற்றும் சட்டத்துக்குப் புறம்பான தொழில்களில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்தக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு பருத்தித்துறை நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டது.**



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இந்த விண்ணப்பம் செய்யப்பட்டது.

தடை உத்தரவை கடந்த வருடம் பெற்றிருந்த நிலையில் இவ்வருடம் மீண்டும் கடலட்டை தொழிலில் ஈடுபடுவதற்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதனை எதிர்த்து மீண்டும் கடந்த மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றில் மீள் தடை உத்தரவைப் பெறுவதற்காக விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை இரு தரப்பினரது சமர்ப்பணங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் கட்டளை நேற்று முன்தினம் ஒகஸ்ட் 4 ஆம் திகதி வழங்கப்படும் என்று தவணையிட்ட நீதிமன்று, வழக்கை ஒத்திவைத்தது.

வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கட்டளைக்காக பருத்தித்துறை நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடற்றொழில் பிணக்குத் தொடர்பில் தீர்த்து வைக்கும் அதிகாரம் முழுமையாக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு உண்டு. மேலும் வடமராட்சியைச் சேர்ந்த மூன்று சங்கங்கள் தென்னிலங்கை மீனவர்கள் கடலட்டை தொழிலில் ஈடுபட அனுமதியை வழங்கியுள்ளன. அத்தோடு நீதிமன்றக் கட்டளையை மீறி தொழில் இடம்பெறுவது தொடர்பில் விசாரணைகள், சாட்சியங்கள் நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம், விண்ணப்பத்தை நிராகரித்தது. (5-8)



இலங்கை வங்கி யாழ்ப்பாணம் அதிமேற்தரக் கிளையின் 81 ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் பிரதான முகாமையாளர் மு.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இதில் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் சி.ஆனந்தராஜா மற்றும் ஓய்வு பெற்ற வங்கியாளர் சங்கத் தலைவர் இ.பிறேமராஜன் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். 18+ கணக்கைப் பேணிய 3 வாடிக்கையாளர்களுக்கு தங்க நாணயப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## அல்வாயில் கோழிகள் திருட்டு

(கரணவாய்)

அல்வாய் பகுதியில் 16 கோழிகள் களவாடப்பட்டுள்ளன.

அல்வாய் வெள்ளிருவைப் பிரிவை பகுதி வீடு ஒன்றிலேயே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையே இக்கோழிகள் வாங்கப்பட்டு கொண்டு வரப்பட்ட நிலையில் இவ்வாறு பதினாறு கோழிகள் ஒட்டுமொத்தமாகக் களவாடப்பட்டுள்ளன. (5-8)

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட காவஷ்தொழில் உரிமையாளர்சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

அதில் தலைவராக சோ.சுப்பிரமணியம், செயலாளராக ப.குணசேகரம், பொருளாளராக செ.பாஸ்கரன் ஆகியோரும் உபதலைவராக கி.கஜேந்திரராசா, உபசெயலாளராக யோ.சுகிர்தன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (5)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது.

இதில் இறுதி நிகழ்வான சங்காபிஷேகம் (1008) நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (5)

## துண்டுப்பிரசுரம் விநியோகித்த மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கட்சியின் துண்டுப்பிரசுரம் கொண்டு சென்ற மூவரைச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வாகனத்தில் சென்று விநியோகம் செய்ய முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்வதுடன் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (4-5-101)



வடமராட்சி மூத்த விநாயகர் ஆலயத்தின் தேர் உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

(படம்:- கரணவாய் செய்தியாளர்)

## வாக்களிப்பு நிலையத்தில் மயங்கி விழுந்த பெண்கள்

(அராலி)

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்களிக்கச் சென்ற இரண்டு பெண்கள் மயக்கமுற்று விழுந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. மயக்கமுற்றவர்கள் நோயாளர் காவுவண்டி மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (4-5-104)

## யாழ்ப்பாணத்துப் பெண் பிரான்சில் நீரில் மூழ்கி பலி

(கரணவாய்)

பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பல்கலைக்கழக மாணவியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.



யாழ்.தெல்லிப்பழை பகுதியை பூர்வீகமாகக் கொண்ட ரஞ்சன் அனிதா என்ற 19 வயது யுவதியே இவ்வாறு உயிரிழந்த வராவார். பல்கலைக்கழக சகபாடிகளுடன் கடந்த திங்கட்கிழமை நீராடச்சென்ற போதே இத்துயர இச்சம்பவம் இடம்பெற்றது. எனினும் அவருடன் சென்றவர்கள் எதுவித ஆபத்துமின்றி தப்பியுள்ளனர். (4-5-8-60)

# கடுமையான தேர்தல் சட்ட மீறல்கள் பதிவாகவில்லை



## ஜாலிய சேனாரத்ன தகவல்

(கொழும்பு)

**எந்தவொரு பகுதிகளிலும் கடுமையான தேர்தல் சட்ட மீறல்கள் பதிவாகவில்லை என பொலிஸ் ஊடக பேச்சாளர் எஸ்.எஸ்.பி.ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

நேற்று புதன்கிழமை தொலைக் காட்சி ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நேர்காணலில் ஜாலிய சேனாரத்ன மேலும் கூறியுள்ளதாவது, "தேர்தல் நடைபெறும் வாக்களிப்பு நிலையங்களிற்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

எனவே பாதுகாப்புப் பிரச்சினை ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. மேலும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை.

மக்களும் அமைதியான முறையில் எந்தவொரு இடையூறும் இன்றி வாக்களிப்பதனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)




## கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

# மண்டலாபிஷேக பூர்த்தி

**காலம்:- 07.08.2020 வெள்ளிக்கிழமை**
**காலை 7.00 மணி முதல்**

அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிகாரமூர்த்திகளுக்கு விசேட அபிஷேகமும் பூசைகளும் இடம்பெற்று அம்பாள் அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் உள்வீதி, வெளிவீதி வலம் வருவார்.

அனைவரும் கலந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளவும்.

பரிபாலன சபையினர் (3482)



## UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF ALLIED HEALTH SCIENCES

**NEW ENROLMENT FOR THE ACADEMIC YEAR 2018/19**

**B.Sc. in Medical Laboratory Sciences, B.Sc. in Nursing and Bachelor of Pharmacy**

The orientation programme for freshers who have been selected for the academic year 2018/19 will be commenced on 25.08.2020, Tuesday at 8.30 am and the enrolment will be held same day after the completion of the orientation programme at the Hoover Auditorium, Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil. All freshers are requested to participate in the orientation programme and enrolment.

Please be present.

Registrar,
University of Jaffna.
04/08/2020. (C-9994)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: செவ் 3 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: Civil Engineer, Building Construction Owner.<br>எதிர்பார்ப்பு: தகுந்த பெண்<br>தொ.இ: B/11055 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தற்காலிக தாதிய தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் அல்லது சொந்தத்தொழில் செய்பவர். கிளிநொச்சி விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/11065 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 44 செவ் 6 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. பிரான்ஸில் கடை வைத்திருக்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: பிரான்ஸ் PR உள்ள பெண்<br>தொ.இ: B/11056 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி. லண்டனில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன். மணமகள் விவாகரத்தானவர். விவாகரத்தும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/11070 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா:18 ½ செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த., AAT, தனியார் நிறுவன முகாமையாளர்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்.<br>தொ.இ: B/11057 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 33 ¼ செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர், மற்றும் உயர் தனியார் உத்தியோகத்தர் போன்றோர். பட்டதாரி மட்டும்<br>தொ.இ: G/11071 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. ஜேர்மனில் வேலை செய்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: PR உள்ள வெளிநாட்டுப்பெண்<br>தொ.இ: B/11058 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: செவ் 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HND IT,<br>எதிர்பார்ப்பு: தனியார் வங்கி, அரச உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/11073 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

# வெளிவாரிப் பரீட்சைகள்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற வெளிவாரிப் பரீட்சைகள் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

| பரீட்சையின் பெயர் | பரீட்சை நடைபெறும் காலம் | அனுமதி அட்டை விநியோகம் |
|---|---|---|
| வணிகமாணி - பகுதி -III (இறுதிச் சந்தர்ப்பம்) (பழைய பாடத்திட்டம் - வருடாந்த பரீட்சை) - 2017 | 24.08.2020- 29.08.2020 | 18.08.2020- 21.08.2020 |
| வணிகத்தில் நான்காம் தேர்வு (இறுதிச் சந்தர்ப்பம்) - 2017 (புதிய பாடத்திட்டம் - வருடாந்த பரீட்சை) | | |

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்பு கொள்ள முடியும்.

பதிவாளர் 05.08.2020 (C-9993)

# வேட்பாளர்களின் வாக்குப் பதிவுகள்

## 2020


அருந்தவபாலன்


அங்கஜன் இராமநாதன்


சிவாஜிலிங்கம்





எம். ஏ.சுமந்திரன்


வீ.ஆனந்தசங்கரி



சி.சிறீதரன்


மாவை.சேனாதிராஜா


டக்ளஸ் தேவானந்தா


சிவசக்தி ஆனந்தன்


இரா. சம்பந்தன்


பா.கஜதீபன்


கஜேந்திரகுமார்

(படங்கள்– கரணவாய்,சாவகச்சேரி,முறிகண்டி, மன்னார் செய்தியாளர்கள்)

# பிரேசிலை ஆட்டிப்படைக்கும் கொரோனா

# உயிரிழப்பு 96 ஆயிரத்தைக் கடந்தது

(றியோடிஜெனிரோ)

**பிரேசிலில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 96ஆயிரத்தைக் கடந்தது.**

உத்தியோகபூர்வ புள்ள விபரங்களின் படி, பிரேசிலில் கொவிட்-19 தொற்றினால் 96 ஆயிரத்து 96பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்புகளை எதிர்கொண்ட இரண்டாவது நாடாக விளங்கும் பிரேசிலில், இதுவரை 28 இலட்சத்து 8ஆயிரத்து 76பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாத்திரம் வைரஸ் தொற்றினால் 56ஆயிரத்து 411பேர் பாதிக்கப்பட்டதோடு, ஆயிரத்து 394பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், தற்போது ஏழு இலட்சத்து 41ஆயிரத்து 213பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் எட்டாயிரத்து 318பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

இதுதவிர, இதுவரை 19 இலட்சத்து 70ஆயிரத்து 767 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர். (ஜ-4)

## அநுராதபுரத்தில் துப்பாக்கிச் சூடு
## பிரதான சந்தேகநபர் உயிரிழப்பு

(கொழும்பு)

அநுராதபுரம்- தஹாயியா கம சந்திப்பில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எஸ். எப்.லொக்கா என்ற எரோன் ரணசிங்க கொல்லப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு இரவு விடுதி ஒன்றில் வைத்து கராத்தே சம்பியனான வசந்த சொய்சா கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான எஸ்.எப்.லொக்கா என்பவரே இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)

## பாடசாலைகளுக்கு கல்வியமைச்சு
## சுகாதார வழிகாட்டல் இறுவெட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைத்தடுப்பது தொடர்பில் அனைத்துப்பாடசாலை சமூகத்துக்கும் அறிவுறுத்தும் வகையில் சுகாதார வழிகாட்டல் ஆலோசனைகளடங்கிய இறுவெட்டு ஒன்றை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

கல்வியமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வின் போது இந்த இறுவெட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி சுகாதார வழிகாட்டிகளை உள்ளடக்கிய இந்த இறுவெட்டு நாடு முழுவதிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னரும் கல்வி அமைச்சினால் விசேட சுற்று நிருபம் மற்றும் வழிகாட்டல்கள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் மேற்படி இறுவெட்டு பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக கல்வி அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கல்வியமைச்சில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணை மற்றும் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ள இறுவெட்டு பாடசாலை ஆரம்பமாகும் தினத்தில் சகல பாடசாலைகளுக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)




## அமைதியான முறையில்
## தேர்தல் வாக்களிப்புகள்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று காலை 7 மணியளவில் ஆரம்பமாகி மாலை 5 மணியளவில் வாக்களிப்பு நிறைவடைந்தது.

கொரோனா அச்சத்திற்கு மத்தியில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

அத்துடன் நேற்று மாலை 4 மணியிலிருந்து 5 மணி வரை தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவர்கள், கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்கள் வாக்களித்தனர்.

கொரோனா தொற்று காரணமாக இம்முறை வாக்களிப்பானது பூரண சுகாதார ஆலோசனைகளின் கீழ் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இரு கட்சிகள் மோதல்!
## வாகனங்களும் வீடும் பலத்த சேதம்

(கொழும்பு)

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அம்பாறை, பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சில இடங்களில் இரு வேறு கட்சி ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தினால் 5 மோட்டார் சைக்கிள் மற்றும் வீடு ஒன்றும் பாரிய சேதமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ஜ-4)

## தென்கொரியாவில்
## 42 நாட்கள் நீடித்த மழை

### 14 பேர் உயிரிழப்பு

(சியோல்)

தென் கொரியாவில் தொடர்ச்சியாக 42 நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கில் சிக்குண்டு 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏழு ஆண்டுகளின் பின்னர் பெய்த கடும் மழை காரணமாக மேலும் 13 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

தென்கொரியாவின் தலைநகர் சியோல் மற்றும் அதனை அண்டிய மாகாணங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக, அங்கு பல்வேறு பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கில் சிக்குண்டு 1000 பேரளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் தற்காலிக வசிப்பிடங்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்த வெள்ளத்தால் 5 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்தோடு, வீதிகள், நெடுஞ்சாலைகள், வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## கொலம்பியாவின் முன்னாள் ஜனாதிபதியை
## வீட்டுக் காவலில் வைக்க உத்தரவு

(பொகடா)

கொலம்பியாவின் உச்சநீதிமன்றம் செவ்வாயன்று முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய செனட்டருமான அல்வாரோ யூரிப்பை வீட்டுக் காவலில் வைக்க உத்தரவிட்டது. மோசடி மற்றும் சாட்சி மோசடி குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளமையினால் அவருக்கு இந்த உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

2002-2010 வரை ஜனாதிபதியாக பணியாற்றிய யூரிப், நாட்டின் மிக பிரபலமான அரசியல்வாதி மற்றும் ஜனாதிபதி இவான் டியூக்கின் அரசியல் வழிகாட்டியாக உள்ளார். 68 வயதான யூரிப் இது குறித்து டுவிட்டர் பதிவொன்றில், எனது சுதந்திரத்தை இழந்திருப்பது எனக்கும், என் மனைவிக்கும், எனது குடும்பத்திற்கும், தாயகத்துக்கும் மிகவும் வருத்தமாகவுள்ளதாக தெரிவித்துள்ளார். இலஞ்சம் மற்றும் நடை முறை மோசடி குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள யூரிப் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் எட்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அனுபவிக்கக்கூடும். (ஜ-4)


# ஆர்வத்துடன் வாக்களித்த மக்கள்



தாவடி


நாவாந்துறை


நல்லூர்



கொடிகாமம்






மன்னார்




வவுனியா





கிளிநொச்சி


திருகோணமலை


மட்டக்களப்பு



கொழும்பு


களுத்துறை

(படங்கள்:- மன்னார், நெளுக்குளம், முறிகண்டி, தருமபுரம், கொடிகாமம் செய்தியாளர்கள்.)

# ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முன்னாள் பிரதமர் வாக்களிப்பு





(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தலிற்கான வாக்குப்பதிவு நடவடிக்கைகள் நாடு முழுவதும் நேற்றுக் காலை 7 மணிமுதல் ஆரம்பமாகி விறுவிறுப்பாகவும் சுமுகமாகவும் இடம்பெற்றது. இந்நிலையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மற்றும் முன்னாள் பிரதமர் தத்தமது வாக்களிப்பு நிலையங்களில் தமது வாக்குகளைப் பதிவு செய்தனர். (ஜ-4)

# 2011 ஆம் ஆண்டின் பின்னர் வாக்களித்த மகிந்த தேசப்பிரிய


(கொழும்பு)

அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களும் மிகவும் பாதுகாப்பானது என்பதால் அனைவரும் சென்று தங்களுடைய வாக்குகளை பதிவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டிய லின்சே மகளிர் பாடசாலையில் வாக்களித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தான் 2011 ஆம் ஆண்டிற்கு பிறகு வாக்காளராக வாக்களிக்க வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனக்கு 65 வயதாகியும் வாக்களிக்க வந்தமைக்கான காரணம் வாக்கெடுப்பு நிலையம் பாதுகாப்பானது என காண்பிப்பதற்காகவும் எனவே அனைவரும் எவ்வித அச்சமும் இன்றி வாக்களிக்க வருமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)



# ஏப்ரல் மாத இறுதிக்கு பிறகு ரஷ்யாவில் குறைந்த கொரோனா பாதிப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவில், கடந்த ஏப்ரல் மாத இறுதிக்கு பிறகு குறைந்த அளவிலான கொரோனா வைரஸ் (கோவிட்-19) பாதிப்பு பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் ஐந்தாயிரத்து 159 பேர் பாதிப்படைந்ததோடு, 144 பேர் உயிரிழந்துள்ளதாக, ரஷ்யாவின் கொரோனா வைரஸ் நெருக்கடியை கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதிக்கு பிறகு, குறைந்த அளவிலான கொரோனா வைரஸ் பாதிப்பு பதிவான நாள் இது வாகும்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால், அதிக பாதிப்பை எதிர்கொண்ட நான்காவது நாடாக விளங்கும் ரஷ்யாவில், இதுவரை எட்டு இலட்சத்து 61 ஆயிரத்து 423பேர் பாதிப்படைந்துள்ளனர். மேலும், 14 ஆயிரத்து 351பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஒரு இலட்சத்து 85ஆயிரத்து 601 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களில் ஆறு இலட்சத்து 61ஆயிரத்து 471பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். (ஜ-4)

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு ஒரேநாளில் 857 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவில் நேற்று முன்தினம் 52 ஆயிரத்து 509 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 857 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தாலும், தினந்தோறும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை 19 இலட்சத்து 8 ஆயிரத்து 255 ஆக உயர்ந்துள்ளது. 39 ஆயிரத்து 795 பேர் உயிரிழந்துள்ளனர். (ஜ-4)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை




(கொழும்பு)

கடும் காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் இன்று அனர்த்த எச்சரிக்கை அறிவிப்பை விடுத்துள்ளது.

இதற்கு அமைவாக காங்கேசன்துறையில் இருந்து மன்னார், கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற் பிரதேசத்தில் காற்றின் வேகம் அடிக்கடி 60 - 70 கிலோ மீற்றர் வரையில் அதிகரிக்கக்கூடும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற் பிராந்தியம் அடிக்கடி கொந்தளிப்பாகக் காணப்படக்கூடும். இந்த கடற் பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆபத்தானதாக இருக்கும் என்றும் இவர்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பேருவளையில் இருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்கரையோர பகுதிகளில் கடல் அலை 2 - 2.5 மீற்றருக்கு உயரக்கூடும். கடல் அலை கரைக்கு வரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## கொவிட் - 19 பரவல் அதிகரிப்பு

# பிலிப்பைன்ஸில் மீண்டும் மில்லியன்கணக்கானோர் முடக்கம்

(மணிலா)

கொரோனா வைரஸ் (கோவிட்-19) தொற்றுகள் அதிகரித்து வருவதால், சுகாதார அமைப்புகள் தடுமாற்றத்தை எதிர்கொள்ள நேரிடுமென மருத்துவர்கள் எச்சரித்ததை அடுத்து, பிலிப்பைன்ஸில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மீண்டும் முடக்கநிலையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் முயற்சியில் முடக்க நிலை கட்டுப்பாடுகளை கடுமையாக்க 80 மருத்துவ சங்கங்கள், ஜனாதிபதி ரோட்ரிகோ டுடேர்ட்டேவிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்ததன் பின்னணியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முடக்கநிலை என்பது அத்தியாவசிய பொருட்களை வாங்க வெளியில் செல்வது அல்லது வெளியில் உடற்பயிற்சி செய்வது தவிர வீட்டிலேயே தங்குவதற்கான உத்தரவுகள் ஆகும்.

மேலும், பொதுப் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது மற்றும் உள்நாட்டு விமானங்கள் தரையிறக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் உணவகங்கள், உணவுப் பொதிகளை விநியோகிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளன.

மணிலாவிலும், லுசோன் தீவில் சுற்றியுள்ள நான்கு மாகாணங்களிலும் இரண்டு வாரங்களாக மக்கள் வீட்டிலேயே இருக்க அறிவுறுத்தும் விதி தற்போது நடைமுறையில் உள்ளன.

எனினும், ஜூன் மாதத்தில் முடக்கநிலை சற்று எளிதாக்கப்பட்டது. ஆனால், தற்போது வைரஸ் தொற்று ஐந்து மடங்கு உயர்வடைந்துள்ளது.

இதனை கட்டுப்படுத்த மருத்துவர்கள் போராடி வருகின்றனர். தற்போது பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளது. (ஜ-4)




# அயோத்தி ராமர் கோவில் பூமி பூஜை

## பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்



(அயோத்தி)

அயோத்தியில் ராமர் கோவிலுக்கான பூமி பூஜையில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, கோவிலுக்கான அடிக்கல்லை நாட்டினார்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலத்தில் ராமர் கோவில் கட்டுவதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்தது. இதற்காக அறக்கட்டளை ஒன்றை அமைக்க வேண்டும் எனவும் அரசுக்கு உத்தரவிட்டது.

எனவே, ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா என்ற பெயரில் மத்திய அரசு அறக்கட்டளை ஒன்றை நிறுவியது. அயோத்தி ராமஜென்ம பூமியில் ராமருக்கு பிரமாண்ட கோவில் கட்டுவது என முடிவு செய்து, இந்த அறக்கட்டளை சார்பில் கோவில் கட்டுமான பணிகளுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

அதன்படி, நேற்று நடைபெற்ற ராமர் கோவிலுக்கான பூமி பூஜையின் போது அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மோடி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

முதல் கட்டமாக, பிரதமர் மோடி அயோத்தி அனுமன் கார்ஹி கோவிலில் வழிபாடு செய்தார்.


அதைத்தொடர்ந்து, குழந்தை ராமர் கோவிலுக்கு சென்று வழிபட்டார். அதன்பின் அங்குள்ள வளாகத்தில் பாரிஜாத மலர்க்கன்றை நாட்டுவித்தார்.

இந்நிலையில், அயோத்தியில் ராமர் கோவிலுக்கான பூமி பூஜையில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, 40 கிலோ எடை கொண்ட வெள்ளியிலான செங்கலை அடிக்கல் நாட்டினார்.

மேலும், ஆர்.எஸ்.எஸ். துணைத் தலைவர் பையாஜி ஜோஷி, ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங், மாநில முன்னாள் முதலமைச்சர் கல்யாண் சிங், பாபா ராம்தேவ் மற்றும் விஸ்வ இந்து பரிஷத் நிர்வாகிகள், பா.ஜ.க. தலைவர்கள், சாமியார்கள் என முக்கிய பிரபலங்களும் ராமர் கோவில் பூமி பூஜையில் பங்கேற்றனர்.

ராமர் கோவிலுக்கான பூமி பூஜை நடைபெறுவதையொட்டி அயோத்தி முழுவதும் விழாக் கோலம் பூண்டுள்ளது.

மோடி பிரதமரான பிறகு அயோத்தியில் சுவாமி தரிசனம் செய்வது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (2)



# பேரறிவாளனுக்கு பரோல் வழங்க கோரிக்கை





(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட பன்னோக்கு விசாரணை முகமை செயற்பாட்டில் உள்ளதா? என சென்னை உயர் நீதிமன்றம் சந்தேகம் எழுப்பியுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக உள்ள பேரறிவாளன் கடந்த 28 ஆண்டுகளாக சென்னை புழல் மத்திய சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார்.

இந்த நிலையில், தனது மகன் பேரறிவாளனுக்கு 90 நாட்கள் பரோல் வழங்கக் கோரி, அவரது தாய் அற்புதம்மாள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த மனுவில், புழல் சிறையில் உள்ள 50 கைதிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், பல்வேறு நோய்களால் அவதிப்பட்டு வரும் பேரறிவாளனுக்கு கொரோனா தொற்று பாதிக்கும் அபாயம் இருப்பதால், அவருக்கு 90 நாட்கள் பரோல் வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இந்த மனு விசாரணைக்கு வந்த போது, ராஜீவ் கொலை வழக்கில் சர்வதேச தொடர்புகள் குறித்து பரிந்துரை அடிப்படையில் பன்னோக்கு விசாரணை முகமை விசாரணை நடத்தி வருவதாகவும், ஏழு பேர் விடுதலை குறித்து முடிவெடுக்க அதன் அறிக்கைக்காக ஆளுநர் காத்திருப்பதாகவும் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, பேரறிவாளனுக்கு பரோல் வழங்குவது குறித்து பதில் மனு தாக்கல் செய்ய சிறைத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது, பேரறிவாளன் ஏற்கனவே பல நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவருடைய உடல் நிலை தொடர்ந்து கண் காணிக்கப்பட்டு வருவதாகவும், இந்த சூழலில் அவரை சிறையில் இருந்து வெளியே அனுப்பினால் நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் பரோல் கோரிய மனு நிராகரிக்கப்பட்டதாகவும் சிறைத்துறை தரப்பில் பதில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், இது போன்ற சூழலில் பேரறிவாளனுக்கு பரோல் வழங்குவது குறித்து தமிழக உள்துறை செயலாளர் தான் முடிவெடுக்க வேண்டும் எனவும் விளக்கமளிக்கப்பட்டது.

இதையடுத்து, கடந்த 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டு பேரறிவாளனுக்கு பரோல் வழங்கப்பட்டதற்கான அரசு மற்றும் நீதிமன்ற உத்தரவுகளை தாக்கல் செய்ய பேரறிவாளன் தரப்புக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (2)

# மிகவும் மோ

# பிரான்ஸை

(பீஜிங்)

இலையுதிர்காலம் அல்லது குளிர்கால அ
மோசமான இரண்டாவது கொரோனாத்
தாக்கும் என பிரான்ஸ் அரசாங்கத்திற்கு
நெறிமுறைகளிற்கான ஆலோசனைகள்
ஆலோசனைக் குழு எச்சரித்துள்ளது.

விஞ்ஞான ஆலோசனைக் குழு வெளிய

## ஆப்கான் சிை

# ஐ.எஸ்.அமை

## தாங்கிய சூத்தி

(காபூல்)


ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத்தில் உள்ள சிறைச்சாலை மீது இஸ்லாமிய அரச பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர் இந்தியப் பிரஜை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.


கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

# வெளிநாடு

# லெபனானில் பாரிய வெடிப்புச் சம்பவம்

## 100 பேர் பலி; 4 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் காயம்





(பெய்ரூட்)

**லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஏற்பட்ட பாரிய வெடிப்பு சம்பவத்தில் 100 பேர் உயிரிழந்ததுடன் 4000 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.**

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள துறைமுகத் தொழிற்சாலை யொன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாரிய வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியது.

லெபனான் தலைநகரை உலுக்கிய குறித்த சம்பவத்தில் இதுவரை பலியானவர்களின் எண்ணிக்கை 100 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும் 4000 பேருக்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், மீட்புப் பணியாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் நெருக்கடி காரணமாக, ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து படிப்படியாக மீண்டு வந்த லெபனானில் ஏற்பட்டுள்ள குறித்த சம்பவமானது, அந்நாட்டினை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அந்நாட்டின் ஜனாதிபதி மைக்கேல் ஔன், குறித்த தொழிற்சாலைக்குள் பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவு மற்று ஆறு ஆண்டுகளாக உர வகைகள் மற்றும் வெடிகுண்டுகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் அமோனியம் நைட்ரைட் வேதிப்பொருட்கள் ஏறக்கு றைய 2750 தொன் அளவில் சேமித்து வைக்கப்பட்டிருந்தமையே இதற்கு காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# மோசமான இரண்டாவது கொரோனாத் தொற்றலை ...ஸைத் தாக்கும் - விஞ்ஞான ஆலோசனைக்குழு

...குளிர்கால ஆரம்பத்திற்குள், மிகவும் ...ரோனாத் தொற்றலை பிரான்ஸைத் ...ாங்கத்திற்கு கொவிட்-19 பாதுகாப்பு ...ாசனைகள் வழங்கும் விஞ்ஞான ...ளது.

...குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும் கொரோனாத் தொற்றின் கட்டுப்பாடு எக்கணமும் மீறப்பட்டு, நிலைமை தலைகீழமாக மாறலாம். கொரோனாத் தொற்றானது கட்டுப்பாட்டை மீறி எக்கணமும் பிரான்ஸில் மிக மோசமாகப் பரவலாம்.

மிக முக்கியமான, பாதுகாப்பு இடைவெளிகள் பேணப்படாமல் போனால், மிகவும் ஆபத்தான நிலைமை தோன்றலாம். கொரோனாத் தொற்றைக் குறுகிய காலத்தில் அழிப்பதும், மிகவும் மோசமாகப் பரவச் செய்வதும் மக்களின் கைகளிலேயே உள்ளது. இதனை அரசாங்கம் மிகவும் கடுமையாகக் கட்டுப்படுத்தவேண்டும்' என தெரிவிக்கப்பட்டு ள்ளது.

ஆனால், பிரான்ஸில், உணவகங்களிலும், பல்பொருள் அங்காடிகளிலும், விடுமுறை இடங்களிலும், கடற்கரைகளிலும், மக்கள் எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இன்றி, பாதுகாப்பு இடைவெளிகள் எதுவுமின்றியே நடந்து கொள்கின்றனர். இந்த பின்னணியிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## ...சிறைச்சாலை தாக்குதல்

# ...அமைப்பிற்கு தலைமை ...ந்த்திரதாரி இந்தியப்பிரஜை

...பாத் ...ஸ்லா ...த்திய ...பவர் ...கள் ...லை ...பேர்

தாக்குதலில் ஈடுபட்ட 11 இஸ்லாமிய அரசு பயங்கரவாதிகளில் மூன்று பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று ஆப்கானிஸ்தான் உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தாக்குதலின் தலைவர் கேரளாவின் காசர்கோட் நகரைச் சேர்ந்த கலுக்கேட்டியா புராயில் இஜாஸ் என்று ஆப்கான் உளவுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது. (2)



# பாகிஸ்தானின் புதிய வரைபடம் - அபத்தமானது

## இந்தியா கண்டனம்

(டில்லி)

பாகிஸ்தானின் புதிய வரைபடத்தை முற்றிலும் நிராகரித்துள்ள மத்திய அரசு, இது தொடர்பாக கண்டனங்களையும் பதிவு செய்துள்ளது.

ஒட்டுமொத்த காஷ்மீர் மாநிலத்தையும், பஞ்சாப்பின் சில பகுதிகளையும் இணைத்து பாகிஸ்தான் புதிய வரைபடம் உருவாக்கி உள்ளது. இதை வெளியிட்ட பிரதமர் இம்ரான் கான், இதற்கு தனது அமைச்சரவை ஒப்புதல் அளித்து இருப்பதாகவும், இது பாகிஸ்தான் மக்களின் லட்சியத்தை குறிப்பதாகவும் கூறினார்.

இந்நிலையில், பாகிஸ்தானின் இந்த வரைபடத்தை முற்றிலும் நிராகரித்துள்ள மத்திய அரசு, இது தொடர்பாக கண்டனங்களையும் பதிவு செய்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'அரசியல் வரைபடம் என்ற பெயரில் பிரதமர் இம்ரான்கான் வெளியிட்டுள்ள வரைபடத்தை நாங்கள் பார்த்தோம்.

இது ஒரு அரசியல் அபத்தமான நடவடிக்கை. மேலும் இந்தியாவின் குஜராத் மற்றும் எங்களின் காஷ்மீர் லடாக் யூனியன் பிரதேசங்களை உரிமை கோருவதை ஏற்க முடியாது.

இந்த அபத்தமான கூற்றுகள் சட்டப்படி செல்லுபடியாகும் நிலையிலோ, சர்வதேச நம்பகத்தன்மையிலோ இல்லை' என்று குறிப்பிட்டுள்ளது. (2)

# அரசியலமைப்பொன்றை உருவாக்க இளைய தலைமுறையினருக்கு மங்கள சமரவீர அழைப்பு

(கொழும்பு)

**கட்சி அரசியலுடன் தொடர்புபடாத அரசியல் அமைப்பொன்றை உருவாக்க முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.**



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த அமைப்புக்கு உண்மையான தேசப்பற்றாளர்கள் என பெயரிடப்பட்டுள்ளது என்றும்,


மேலும் இந்த அமைப்புக்கு பிரபல அரசியல்வாதிகள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, நாடாளுமன்ற அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தேர்தல் மத்திய நிலையத்தின் முன் வேருடன் சாய்ந்த பெரிய மரம்

(திருமலை)

திருகோணமலை தேர்தல் மத்திய நிலையமாக விளங்கும் விபுலானந்தா கல்லூரிக்கு முன்பாக உள்ள பெரிய மரம் வேருடன் சாய்ந்துள்ளது.



நேற்று முன்தினம் வீசிய காற்றின் காரணமாக இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இதனால் திருகோணமலை - கண்டி வீதியூடான பிரதான போக்குவரத்து அரை மணிநேரத்திற்கு மேலாக தடைப்பட்டது.

தேர்தல் வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் தேர்தல் கடமைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட்டு இருக்கவில்லை. கடமையில் இருந்த பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மரத்தை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

திருகோணமலை நகர சபை அனர்த்தப் பிரிவு ஊழியர்கள் மரங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஜ-4)

# மகளை கொலை செய்த தந்தைக்கு மரண தண்டனை

(கொழும்பு)

தன்னுடைய மகளை கொலை செய்த தந்தைக்கு நுவரெலிய மேல் நீதிமன்ற நீதிபதி பிரமிர ரத்நாயக்க மரண தண்டனை வழங்கி உத்தரவிட்டுள்ளார். நுவரெலிய, ராகல பகுதியை சேர்ந்த 41 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2014.10.24 ஆம் திகதி இரவு தன்னுடைய மூன்றரை வயது மகளை கழுத்தைநெரித்து கொலை செய்த சம்பவம் தொடர்பில் குறித்த நபருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# புத்தளம் களப்பிலிருந்து மீனவரின் சடலம் மீட்பு

(புத்தளம்)

புத்தளம் களப்பு பகுதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை மீனவர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மணல் குன்று பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவரின் சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

குறித்த களப்பு பகுதியில் சடலமொன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு சென்ற புத்தளம் பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், விசாரணைகளையும் ஆரம்பித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிரந்தர எதிரிகள்!

ஒரு நண்பன் எதிரியாக ஆவது சகஜம். எதிரி நண்பனாக ஆகுவதும் சகஜம். நேற்று வரைக்கும் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தவன் இன்றைக்குத் திடீரென்று பேச்சை நிறுத்திக்கொள்வான், திடீரென்று வந்து ஒட்டிக் கொள்வான், நண்பனாகிவிடுவான். இது ஒரு சகஜமான விடயம். இப்படி இருக்கின்ற போது நமக்கு நிரந்தரமான எதிரி என்று யாராவது உண்டா? என்று கேட்டால் உண்டு என்று சொல்லுகின்றார்கள் பெரியவர்கள் (சாய்பாபா). நிரந்தர எதிரி என்கிறதைத் தான் நித்ய சத்ரு என்கின்றார்கள். அந்த நித்ய சத்ரு யார் என்று கேட்டால் ஆசை தான் அது என்று சொல்லுகின்றார்கள். ஆசைகள் இருக்க வேண்டியது தான். ஆனால் அதெல்லாம் ஒரு கட்டுக்குள்ளே இருக்க வேண்டும். ஆசை அளவுக்கு மீறிப் போகும் போது மனிதன் பாதை மாறி போக வேண்டியதாக போய் விடுகின்றது. தப்பான ஆசை– துராசை, அளவுக்கு மீறிய ஆசை–பேராசை இது மனிதனை கீழே இறக்கிவிட்டுவிடும். நாங்கள் சாதாரணமாக எதை எதை எல்லாம் துக்கம், வருத்தம் என்று நினைக்கின்றோமோ இதை எல்லாம் அப்படியில்லை என்கின்றார்கள்.

மனிதனுடைய துக்கத்திற்குக் காரணம் என்ன? ஆசைகள் நிறைவேறவில்லை என்பதற்காக எழுந்த வேதனையா? முயற்சி செய்தால் காரியம் முடியாமல் போச்சே என்பதனால் ஏற்பட்ட வருத்தமா?

தேர்விலே வெற்றி கிடைக்கவில்லை என்பதால் ஏற்பட்ட சோகமா?

பணம் சேர்க்க முடியவில்லை– பங்களா வாங்க முடியவில்லை என்பதனால் உண்டான இயலாமை கலந்த துக்கமா? லாட்டரி சீட்டு வாங்கினோம் – முதல் பரிசு விழவில்லை என்னும் வருத்தமா?

இதையெல்லாம் தான் துக்கங்கள், வருத்தங்கள் என்று நாம் நினைக்கின்றோம். அது தவறாம். இதெல்லாம் துக்கம் இல்லையாம். தேகாபிமானம் தான் துக்கமாம்.

உடம்புடன் தன்னை இணைத்துப் பார்க்கின்ற அறியாமை இருக்கின்றது பாருங்கள்... அது தான் துக்கம்.

நான்– எனது இந்த இரண்டு வார்த்தை தான் மனிதனுடைய துக்கத்திற்குக் காரணம்.

ஒன்று அகங்காரம். இன்னொன்று மகோரம். ஆசைகள் மனிதனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கலாம்... ஆனால் அதுவே தான் மனிதனை துக்கத்திலேயும் ஆழ்த்துகின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். இது என்ன அவ்வளவு சுலபமான காரியமா என்று நீங்கள் யோசிக்கலாம்.

ரயில் வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. ஒரு இலட்சம் பேர் அதை எதிர்த்து நின்றாலும் அதை நிறுத்த முடியாது. ஆனால் எந்த எஞ்சினுக்கு உள்ளே இருக்கிற ஒரு கருவியை இயக்கினால் பிரேக் போட்டு விட முடியுது இலட்சக்கணக்கானவர்கள் சாதிக்க முடியாததை ஒரு சின்ன பிரேக் சாதித்துவிடுகிறது. இது மாதிரி தான் மனமும். மனதுக்கு பிரேக் போட்டால் எல்லா துன்பமும் காணாமல் போய்விடும்.

'சூரியனுடைய ஒளியை மேகம் மறைத்துவிடுகின்றது.... இருளை உண்டாக்கிவிடுகின்றது. ஆனால் காற்று வீசும் போது மேகம் விலகிப் போய்விடுகிறது. மறுபடியும் சூரியன் பிரகாசிக்கின்றது.

அதே மாதிரி தான்... மனிதனுக்கு உள்ளே சுயப்பிரகாசமாக ஒளி வீசுகின்ற ஆத்ம தத்துவத்தை ஆசை என்னும் மேகம் சூழ்ந்து விட்டுத் திரை போட்டு மறைக்கின்றது.

அன்பு என்கின்ற காற்று வீசும் போது– அகங்கார, மமகார மேகங்கள் விலகிப் போய் விடுகிறது. ஆத்ம தத்துவத்தின் வெளிச்சம் புலப்படுகிறது.

அதனால் Ego, attachment அதாவது நான்–எனது என்னும் எண்ணங்களை கட்டுப்படுத்தி வைக்க வேண்டும் என்பது பெரியவர்களுடைய அறிவுரை. இது எந்த அளவுக்கு நமக்கெல்லாம் சாத்தியம் என்பது தெரியவில்லை. இருந்தாலும் சொல்ல வேண்டியதை சொல்லி வைப்போமே.

மனிதனுடைய ஆசைகள் எப்படி இருக்கின்றது என்று தெரிந்து கொள்வதற்காக ஒரு தடவை கடவுள் இங்கே வந்தாராம்.

மூன்று மனிதனைப் பார்த்தார். "உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் தருகின்றேன் " என்றார். முதல் ஆள் ஒரு துறவி : அவர் கேட்டார். " எனக்கு சொர்க்கம் வேண்டும் " என்று. சரி தருகின்றேன் என்று சொன்னார்.

அடுத்த ஆள் ஒரு சம்சாரி ... அவன் கேட்டான் " எனக்கு 10 இலட்சம் ரூபாய் பணம் வேண்டும் " என்று சரி தருகின்றேன் என்று சொன்னார். அடுத்த ஆளைப் பார்த்து உனக்கு என்ன வேண்டும் என்றார். அவன் மெதுவாக அருகில் வந்து கடவுள் காதோடு காதாக...

" அந்த இரண்டாவது ஆளுக்கு பத்து இலட்சம் பணம் தருவதாக சொன்னீர்களே அவனுடன் வீட்டு அட்ரஸ்ஸை மட்டும் கொடுங்கள் மற்றதை நான் பார்த்துக் கொள்கின்றேன் " என்றான்.

# உலகை உலுக்கும் கொரோனா உயிரிழப்பு ஏழு இலட்சத்தை கடந்தது!

(ஜெனீவா)

**மனித அழிவுகளை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றினால், உலகளவில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஏழு இலட்சத்தைக் கடந்தது.**



உத்தியோகபூர்வ புள்ளி விபரங்களின் படி, உலகளவில் மொத்தமாக ஏழு இலட்சத்து நான்காயிரத்து 365 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றினால், ஒரு கோடியே 87 இலட்சத்து இரண்டாயிரத்து 736 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர, ஒரு கோடியே 19 இலட்சத்து 17ஆயிரத்து 247 பேர் இதுவரை பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றினால் அதிக பாதிப்புகளை எதிர்கொண்ட நாடாக அமெரிக்கா விளங்குகின்றது. அடுத்தபடியாக பிரேஸில், இந்தியா, ரஷ்யா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. (ஜ-4)

# லெபனான் வெடிப்புச் சம்பவம் இலங்கை தூதரகத்திற்கும் சேதம்

(பெய்ரூட்)

லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் அங்குள்ள இலங்கை தூதரகத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


எனினும் இலங்கை தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய பணியாளர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என லெபனானுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் இலங்கைத் தூதரகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில்உள்ள துறைமுகத்தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாரிய வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியது. லெபனான் தலைநகரை உலுக்கிய குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 78 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில், மீட்பு பணியாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தபால்மூல வாக்கு பெறுபேறுகள் இன்று பிற்பகலுக்கு பின்னர்



(கொழும்பு)

இம்முறை பொதுத் தேர்தலில் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி 66 நிலையங்களில் இன்று காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது.

தபால்மூல வாக்களிப்பின் தொகுதி மட்டத்திலான முதலாவது உத்தியோகபூர்வ பெறுபேற்றை இன்று நண்பகல் 12 மணிக்கு பின்னர் வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இறுதித் தேர்தல் பெறு பேறுகள் இன்று நள்ளிரவிற்கு முன்னர் வழங்கக்கூடியதாக இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

விருப்பு வாக்கு பெறுபேறுகள் நாளை நள்ளிரவுக்கு முன்னர் முழுமையாக வெளியிடக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)




## தஞ்சம் புகுவோமா நல்லையில்

பற்பல சோதனைகள், ஏக்கங்கள்
தேசம் மீட்சி பெற நாதியில்லை
எங்கும் மன நிம்மதியில்லை
உய்தி பெற உன்னையன்றி
யார் ஊர் மாக்களின்
மமதை போக்கி நீதி நியாய
உணர்வை மேம்படுத்த விரைந்து
தஞ்சம் புகுவோமா நல்லையில்

எஸ்.எஸ்.உமாசிவம்,
ஏழாலை.

## சூழும் இடரதுவும் சூழாமல் செய்திடுவாய்!

வெற்றியே வழங்கும்
வேலுடைய வீரனே!
வேண்டும் வரமீயும்
வள்ளல் பெருமானே!
சுற்றியே வருகிறோமுன்
சுந்தரக் கோயிலதை!
சூழும் இடரதுவும்
சூழாமல் செய்திடுவாய்!
பற்றியே பிடிக்கிறோமுன்
பாத கமலமதை!
பாழும் வினையகற்றிப்
பாது காத்திடுவாய்!
தொற்றியே தொல்லைதரும்
கொரோனாவை ஒழித்திடுவாய்!
தோடுடைய செவியனிள்
திருமகனே திருமுருகா!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.

## கந்தன் கால் தடம் பாரீர்

அதிகாலையில் ஓர் சந்ரோதயம்
கண்டேன் கந்தன் விழி இரண்டிலும்
கயலினை ஒத்த கண்களில்
செழுமையில் பூத்த செவிகளையும்
புன்முறுவலில் சிரித்திடும் அழகினையும்
பளிச்சிடும் தங்க நுதலினையும் கொண்ட
பாவங்கள் போக்கும் பாலகன் கந்தன்
கால் தடமோ? நல்லை நகரெங்கும்
கண்டேனே! கதியுற்றுத் தவித்தேனே.

லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்
மறவன்புலோ மத்தி

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

அண்டர் மூவர் யாவ ரேனும்
அணிந்து பணியுஞ் சோதியான்
தொண்ட ருள்ள மண்டி யொன்றும்
தூயன் நேயன் நீதியான்
உண்மை யன்பை உணர்ந்து எண்ணி
ஓதும் போதும் யாவற்கும்
வண்மை கூட்டும் வாழ்வு காட்டும்
வண்ணன் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

36

கலாநிதி முருகர் குணசிங்கம்

ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் மேலைத்தேச நாடுகளில் இரண்டாம் தலைமுறையினர் அநேகமாக அந்நாடுகளின் கலாசாரத்தோடு இரண்டறக் கலந்து (Assimilation) ஒன்றிப் போய் விடுவார்கள் என்றே பல ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

ஆனால் யூத இன மக்களின் இளைய தலைமுறையினரோ அல்லது சீனர்கள், இந்தியர்கள், முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த இளம் தலைமுறையினரோ தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பல தலைமுறைகளாகத் தமது மத, மொழி, பண்பாடுகளைப் பேணி வருகின்றபோது ஈழத்தமிழ் இளம் தலைமுறையினர் குறித்து மேற்படி ஆய்வாளர்களும் அறிஞர்களும் அதற்கு மாறாகச் சிந்திக்கிறார்கள் என்பது வியப்பிற்குரியது.

மலேசியாவில் வாழும் மூன்றாம், நான்காம் ஈழத்தமிழ் இளம் தலைமுறையினருள் பெரும்பான்மையினர் இன்றுவரையும் தமது சமய, மொழி, கலை,பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்து வருகின்றார்கள் என்பதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

**பிரித்தானியா, அமெரிக்கா, கனடா**

(ஆங்கில மொழி நடைமுறையில் உள்ள நாடுகள்)

ஆங்கில மொழி நடைமுறையில் உள்ள பிரித்தானியா, அமெரிக்கா, கனடா ஆகிய மூன்று நாடுகளும் தமது குடிவரவுக் கொள்கையின்படி தொழில்சார் வல்லுநர்களையும் மாணவர்களையும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து வரவேற்றதுடன் அரசியல் தஞ்சம் கோரி தமது நாடுகளுக்குள் வருபவர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்ட நாடுகள் ஆகும்.

குறிப்பாக கனடா, பல்கலாசாரத்தை நடைமுறைப்படுத்தியும் ஊக்குவித்தும் வருகிறது. எனவே இம்மூன்று நாடுகளுக்கும் ஈழத்தமிழர்களில் தொழில்சார் வல்லுநர்கள், மாணவர்கள் குறிப்பிடத்தக்க தொகையினர் சென்று அடைந்ததைப் புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகிறது.

அதனையடுத்து அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாகப் பெரும் தொகையினர் மேற்கண்ட நாடுகளுக்குப் போய்ச் சேர்வதை குறிப்பாகக் கனடாவிற்குள் போய்ச் சேர்வதை அந்நாடுகளின் புள்ளிவிபர இலாகா அறிக்கைகள் மூலமும் பல்வேறு ஆய்வுகள் மூலமும் அறிய முடிகிறது.

அவ்வாறான தொழில்சார் வல்லுநர்களையும் மாணவர்களையும் மேலும் பல்வேறு தரப்பட்ட மனித வளங்களையும் உழைப்புச் சக்திகளையும் பெருவாரியாகத் தமது நாட்டுக்கு வரவழைக்க வேண்டிய தேவையும் தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்பட்டது.

உலக சந்தையில் ஏற்பட்ட வணிகப் போட்டிகளுக்கு ஈடுகொடுக்க வேண்டிய கட்டாயமும் தமது உள்நாட்டுப் பொருளாதார நிலைமைகளைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் தவிர்க்க முடியாத பொருளாதாரக்காரணிகளாக அமைந்தன.

அதேவேளையில் சிங்கள அரசினால் இன அழிப்புக்கு உள்ளாக்கப்படும் ஈழத்தமிழர்கள் தமது நாட்டிற்குள் அகதிகளாகத் தஞ்சம்கோரி வரும் போது மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்குப் பாதுகாப்பும் மறுவாழ்வும் கொடுக்க வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருக்கின்றார்கள்.

கனடா, அதிகக் குளிரும் அதிக வெயிலும் கொண்ட நாடு ஆகும். குளிர் காலமாகிய மார்கழி தொடக்கம் பங்குனி, சித்திரை வரை அநேகமாக 20-30 பாகைக்கும் குறைவான (Minus) காலநிலையைக் கொண்டுள்ளது.

அதேபோல் வைகாசி தொடக்கம் சுமார் நான்கு மாதங்கள் 30-35 பாகைக்கும் அதிகமான (Plus) வெப்பமான காலை நிலையைக் கொண்டது. கனடாவை விட, அமெரிக்கா, பிரித்தானியா ஆகியவை சற்றுக் குளிர் குறைந்த நாடுகள் ஆகும். ஆனால் ஈழத்தமிழ் அகதிகள் பிரித்தானியா, அமெரிக்கா



ஆகிய நாடுகளை விடக் கனடாவையே பெரிதும் விரும்பிச் சென்றனர்.

அந்த வகையில் தமது தாய்நாட்டுக்கு வெளியே அதிகத் தொகையில் ஈழத் தமிழர்கள் வாழ்கின்ற நாடாக கனடா திகழ்கின்றது.

கனடாவில், குறிப்பாக ஈழத்தமிழர்கள் 90 விடுக்காட்டினர் வாழும் ரொறன்ரோவில் ஆங்கிலம், பிரெஞ்சு, சைனிஸ், இத்தாலியன் மொழிகளுக்கு அடுத்ததாக கூடுதலாகப் பேசப்படும் மொழியாக தமிழ் மொழி ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.

கனடா அரசு அகதிகளை வெளிப்படையாக வரவேற்ற ஒரு நாடாகக் காணப்பட்டமையும் பல்கலாசாரச் சூழ்நிலையும் ஆங்கிலமொழி பேசுகின்ற சூழ்நிலையும் கூடுதலாக ஈழத்தமிழர்களை அங்கு ஈர்த்த முக்கியமான காரணிகளாக அமைந்தன.

ஆனால் அமெரிக்கா, பிரித்தானியா அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளைப் போல் 1990களுக்குப் பின்னர் தமது நாட்டுக்கு அகதிகள் வருவதை கனடாவும் தவிர்க்க முயன்றதால், தற்போது ஈழத்தமிழர்கள் அகதிகளாகச் செல்வது மிகக் குறைந்து காணப்படுகிறது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்குப் பல்வேறு மட்டத்தினரான ஈழத்தமிழர்கள் சென்று வாழ்வது போலவே பிரித்தானியா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கும் பல்வேறுபட்ட மட்டத்தைச் சேர்ந்த ஈழத்தமிழர்கள் சென்று வாழ்ந்து வருகின்றார்கள்.

ஈழத்தமிழர்களின் சமூக நிலைமை, அவர்களது வாழ்க்கை முறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பனவெல்லாம் பெரும்பாலும் ஒரே தன்மை வாய்ந்தாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

மேற்கண்ட பிரதேசங்கள் புவியியல் அடிப்படையில் பிரிந்து இருந்தாலும், அங்கு வாழும் ஈழத்தமிழர்களின் சமூக நிலைமைகளில் பெரிதாக மாற்றங்கள் இருப்பதாகக் கூறமுடியாது.

இருப்பினும், தட்ப வெப்ப கால நிலைகளும் அந்நாடுகளில் வாழும் சனத்தொகையின் அளவும், வாய்ப்புகளையும் வசதிகளையும் பொறுத்துச் சில மாறுபாடுகள் இருப்பதைக் காணமுடிகிறது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மூன்று நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்களின் வாழ்க்கையின் சில முக்கியமான விடயங்களை மேற்கொண்டு ஆய்வு செய்வது பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளும் பரந்த நிலப்பரப்பைக் கொண்டனவாகவும் மக்கள் நெருக்கம் குறைந்தும் காணப்படுகையில், பிரித்தானியா குறைந்த நிலப்பரப்பையும் அதிக மக்கள் தொகையும் கொண்ட நாடாகவம் இருக்கின்றது.

அமெரிக்கா, கனடா நாடுகளில் குளிர் அதிகமாக இருந்தபோதிலும் அதற்கு ஏற்ற நல்ல வீட்டு வசதிகளைக் கொண்டு இருக்கின்றது.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பெரும்பாலும் வசதியான தனிவீடுகளிலும் (Detached Houses) இட வசதி உள்ள அடுக்குமாடிக் கட்டடங்களிலும் வாழ்கின்றார்கள்.

ஆனால் பிரித்தானியாவில் குறிப்பாக ஈழத்தமிழர்கள் செறிந்து வாழும் லண்டன் மாநகரில் வசதி படைத்தவர்கள் தனியாக வீடுகளிலும் சாதாரண வருமானம் உள்ளவர்கள் தொடர் இணைப்பு வீடுகளிலும் (Joint Houses) வாழ்வதைக் காண முடிகிறது.

மிகவும் கடினம். ஆனால் அமையும், பாதுகாப்பும் சுதந்திரமும் இல்லாத ஒரு நாட்டில் இருந்து வந்து அமைதியாகவும், பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழ முடிவதால், எங்களுக்குக் குளிர் ஒன்றும் பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை என ஒரு குடும்பத்தலைவர் தெரிவித்தார்.

ஆனால் அளவுக்கு அதிகமான குளிரும் வெப்பமும் ஈழத்தமிழர்களைப் பல்வேறு வகைகளில் வாட்டி வதைக்கும் பொழுது அவர்களின் அன்றாட வாழ்க்கையில் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக ஆகின்றனர்.

வேலை இல்லாமல் இருக்கும் குடும்பப் பெண்களும் சிறு குழந்தைகளும் வயோதிபர்களும் பெரும்பாலும் வீட்டிற்கு உள்ளேயே முடங்கிக் கிடக்க நேரிடுகிறது. குளிர்காலத்தில் பனி கொட்டிக் கொண்டே இருக்கும்.

வீட்டுக்கு வெளியே பனிக்கட்டிகள் இரண்டு மூன்று அடி உயரத்திற்கு நிறைந்து இருக்கும். சில மாதங்களில் மோட்டார் வாகனங்களை வீதியில் ஓட்ட முடியாது.

இக்காலகட்டங்களில் அவர்களது வாழ்க்கை சூனியம் நிறைந்ததாகவே காணப்படுகிறது. பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதிலும் சமூகக் கடமைகளைச் செய்வதிலும் தடங்கல்கள் ஏற்படுகின்றன.

குடும்ப வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் அதன் வளர்ச்சிப் பாதையிலும் இவை தடைக்கற்களாகவே காணப்படுகின்றன.

வீட்டுக்கு உள்ளேயே முடங்கிக் கிடப்பதால் மன உளைச்சலுக்கும் உளவியல் தாக்கங்களுக்கும் உட்பட்டு விரைவில் நோயாளிகளாக மாறி விடுகின்றார்கள்.

இத்தகைய சூழ்நிலைகள் ஈழத் தமிழர்கள் எல்லோருக்கும் முதல் தர சவாலாகவே காணப்படுகின்றது. அமெரிக்கா, கனடா நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களுள் பெரும்பாலானவர்கள் தமது அன்றாட அலுவல்களுக்கு மோட்டார் வாகனங்களை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

பாரிய வீதி அமைப்புகளும், வாகன நெருக்கம் குறைவாக இருப்பதும் அதற்குக் காரணமாக இருக்கின்றன. ஆனால், லண்டன் மாநகரில் வசிக்கின்ற ஈழத் தமிழர்கள், போக்குவரத்து நெரிசல், குறுகிய வீதி அமைப்பு காரணமாக மோட்டார் வண்டிகளிலோ, அரசப் பேருந்துகளிலோ செல்வது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

(தொடரும்)





நேற்று இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் வாக்கு நிலையங்களுக்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டார்.

# அயோத்திக்கு விடுதலை!

## இராமர் கோயில் அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மோடி



(டில்லி)

அயோத்தியில் இராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதன் மூலம் அயோத்திக்கு இன்று விடுதலை கிடைத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நேற்று இராமர் கோயிலுக் கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உலகம் முழுவதும் இன்று இராமர் பக்தி கீதங்கள் ஒலிக்கின்றன.

உலகம் முழுவதும் உள்ள இராம பக்தர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீராமர், சீதாதேவியை நினைவு கூருவோம்.

என்னை இந்த விழாவுக்கு அழைத்ததற்கு மனமார்ந்த நன்றி. இராமர் கோயில் பூமி பூஜையில் கலந்து கொண்டதை நான் எனது வாழ்வில் கிடைத்த பாக்கியமாகக் கருதுகிறேன். பல தலைமுறைகளாக பலர் இந்த இராமர் கோயிலுக்காக பல்வேறு தியாகங்களை செய்துள்ளனர்.

இராமர் கோயிலுக்காக ஏராளமானோர் போராட்டக் களத்தில் இறங்கினர். இலட்சக்கணக்கானோரின் போராட்டத்தால் தான் இராமர் கோயில் எனும் கனவு இன்று நனவாகியுள்ளது.

இராமர் கோயிலுக்காகப் போராடிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.(ஐ-4)

# தனியார் வர்த்தகர்களுக்கு நெல் அதிக விலைக்கு விற்பனை

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் வாரியம் தனது நெல் கொள்முதல் மையங்களைத் திறந்து சுமார் ஒரு வாரம் கடந்துவிட்டது. ஆனால் இதுவரை நெல் சந்தைப்படுத்தல் வாரியத்திற்கு நெல் கிடைக்கவில்லை என நெல் சந்தைப்படுத்தல் வாரியத்தின் பொலநறுவை பிராந்திய மேலாளர் நிமல் ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நெல் அறுவடை தொடங்கியுள்ள நிலையில், பொலநறுவை மாவட்டத்தில் 18 நெல் கொள்முதல் மையங்கள் அரசு உத்தரவாத விலையில் நெல் வாங்க திறக்கப்பட்டுள்ளன.

அரசு வர்த்தக உத்தரவாத விலையை விட அதிக விலைக்கு தனியார் வர்த்தகர்கள் விவசாயிகளிடமிருந்து நெல் வாங்குவதே இதற்குக் காரணம். ஒரு கிலோ தரமான நெல் அரசு உத்தரவாதமான 50 ரூபாய் விலையில் வாங்கப்படுவதாகவும், நெல் சந்தைப்படுத்தல் வாரியம் ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் அதிகபட்சமாக 5 ஆயிரம் கிலோ நெல் வாங்குகின்றனர்.

நிலவும் மழைக்கால வானிலை காரணமாக, பல விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அரசு உத்தரவாத விலையை விட குறைந்த விலைக்கு தனியார் வர்த்தகர்களுக்கு விற்க ஆசைப்படுகிறார்கள்.

பொலநறுவை மாவட்டத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டதால் இந்த ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட நெல் அறுவடை நடைபெறவில்லை என்று மாவட்ட விவசாயிகள் கூறுகின்றனர். (ஐ-8)

# கொரோனா தொற்று 2838

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 838 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று 4 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் புதிதாக அடையாளம் காணப்பட்டவர்களில் 2 பேர் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இருந்தும் ஒருவர் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சேனபுரா புனர்வாழ்வு நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவரும் அடங்குவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ-4)

# நாட்டை வேலைத்தளமாக மாற்ற வேண்டும்-அமரவீர



(கொழும்பு)

நாட்டை ஒரு வேலைத்தளமாக மாற்ற வேண்டும் என்பதே எமது நோக்கமென அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை பொதுத்தேர்தலில் வாக்களித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அமைதியான முறையில் தேர்தலை நடத்தியுள்ளோம்.

மேலும் இந்தத் தேர்தலில் எந்தவொரு வன்முறைச் சம்பவங்களோ கொலைகளோ பதிவாகவில்லை.

இதேவேளை ஏனைய கட்சிகளை சேர்ந்தவர்களும் இணைந்துள்ளமையினால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 5 இடங்களை கைப்பற்றுவோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை அபிவிருத்தி பாதையின் கீழ் நிச்சயம் கொண்டு செல்வார் என நம்புகின்றோம்.

மேலும் இந்தத் தேர்தலில் நாம் அவதானித்த முக்கிய விடயம் என்னவென்றால், மக்கள் திருட்டு, மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராக அணிதிரண்டு வருகின்றனர்.

எனவே, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவது தேர்தலில் வெற்றிபெறுபவர்களின் முக்கிய பொறுப்பாகும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# அநுராதபுர மக்களின் குருதியில் ஈயம்

## ஆய்வில் தகவல்

(அநுராதபுரம்)

**அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராம மக்களின் குருதியில் ஈயம் அடங்கி இருப்பது பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாடு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார்.**

இந்த மக்களின் குருதியில் ஒரு டெசிலீடருக்கு 3.9 மைக்ரோ கிராம் அளவில் ஈயம் இருப்பதாக பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

இதன் காரணமாக இந்த மக்களுக்கு சுவாசக்குழாய் உபாதை, சிறுநீரகம் செயலிழப்பு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன.

குருதியில் ஈயம் காணப்படுவது காரணமாக பிள்ளைகளின் அறிவு மட்டமும் குறைவடையும்.

உணவு, குடிநீரில் உள்ள ஈயமே இவ்வாறு குருதியில் கலந்துள்ளது என ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களை தெரிவு செய்து இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நபர்களை தெரிவு செய்து இந்தப் பரிசோதனைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# குளவிக்கொட்டுக்கு இலக்காகிய வாக்காளர்கள்

(கொழும்பு)

வெலிமட- குருத்தலாவை புனித தோமையார் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த தேர்தல் வாக்களிப்பு மத்திய நிலையத்துக்கு நேற்றுக்காலை வாக்களிக்கச் சென்றவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்கானவர்களுள் 53 வயதுடைய ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# வாக்குச் சீட்டுக்களை ஒளிப்படம் எடுத்தவர் கைது

(கொழும்பு)

தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி வாக்குச் சீட்டுகளை கையடக்கத் தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்த இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை காலை நாவலப்பிட்டிய- இம்புல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த இளைஞரே (வயது-32) குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டிய மத்திய கல்லூரியிலுள்ள வாக்குச் சாவடியிலேயே குறித்த இளைஞன், வாக்குச்சீட்டுகளை கையடக்கத் தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்தார் என்ற குற்றச்சாட்டில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாவலப்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# மதுபோதையில் இருந்த பொலிஸ் பரிசோதகர்

## பணி நீக்கம் செய்யப்பட்டார்

(கொழும்பு)

மதுபோதையில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

வாக்கு எண்ணும் மத்திய நிலையமாகப் பெயரிடப்பட்டுள்ள வெயாங்கொட- பத்தலகெதர தேசிய கல்வியகத்தில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரியொருவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட பொலிஸ் நிலையப் பரிசோதகர் ஒருவரே பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளாரென கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த பொலிஸ் பரிசோதகர் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனை செய்தபோது அவர் மதுபோதையில் இருந்துள்ளமை உறுதி செய்யப்பட்டமையடுத்தே அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ஐ-4)

# குணமடைந்தோர் 2537

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (கொவிட்19) தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் பூரணமாக குணம் அடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, 2 ஆயிரத்து 537 பேர் முழுவதுமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 834 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2077

Search for people, places and things  Nagendram Home

### ராணி

**உன் தவறை மறைக்க நீ சொல்லும் பொய்கள் உனக்கான தண்டனையை தள்ளிப்போட உதவலாம்... ஆனால் ஒருபோதும் ஆண்டவன் அளித்திடும் தண்டனையை தள்ளுபடி செய்திட உதவாது..!**

### சுரேஷ்



மற்றவர்களிடம் இருப்பவை எல்லாம் நம்மிடம் இருக்கின்றனவா என்று பார்க்கின்றோமே தவிர... நம்மிடம் இருப்பவை எத்தனை பேரிடம் இல்லை என்பதை பார்க்கத் தவறி விடுகின்றோம்..!

### சந்தியா



வாழ்க்கை என்பது சந்திரன் மாதிரி... சில சமயம் இருட்டு சில சமயம் முழு நிலவு... எதுவுமே நிரந்தரமில்லை...!

### காமினி



எதிர்பார்த்த போது கிடைக்காத எதுவும் அதற்கு பிறகு எத்தனை முறை கிடைத்தாலும் சந்தோசம் கொடுப்பதில்லை

### மிதுன்




### ரெய்னா

**எல்லாம் தெரியும் என்று குழப்பத்தோடு இருப்பதை விட எதுவும் தெரியாது என்று தெளிவோடு இரு.**

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆலயத்தை தரிசிக்க நிறுத்திய பேருந்து மீது தாக்குதல்

## இருவர் கைது

(காத்தான்குடி)

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து மட்டக்களப்பு பிள்ளையாரடி ஆலயத்தில் நிறுத்தி தரிசித்த போது பேருந்தின் முகப்புப் கண்ணாடியை அடித்து சேதப்படுத்திய சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுடன் இதில் இருவரை கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தனியார் சொகுசு பேருந்து மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டு மட்டக்களப்பு பிள்ளையாரடியிலுள்ள ஆலயத்தின் முன்னால் நிறுத்தி தரிசித்துக் கொண்டிருந்தபோது அந்த பேருந்தின் முகப்பு கண்ணாடி மீது இருவர் கம்பினால் தாக்குதலை மேற்கொண்டனர்

இதனால் கண்ணாடி உடைந்து சேதமடைந்ததுடன் தாக்குதலை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் இரு தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குள் ஏற்பட்டுவந்த பிரச்சினை காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிசாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஜ-4)



# ஆன்மீகம்

## நம்பிக்கை நம்முடைய மூன்றாவது கை!

அதனால் அதிக மீன்கள் எங்களுக்கு கிடைப்பதில் ஆச்சரியம் இல்லை.'' அதிக மீன்கள் கிடைக்காமல் ஓரளவே மீன்கள் கிடைத்த மீனவர்களிடமும் இதுபற்றி ஆய்வாளர் கேட்டார். அவர்கள் சொன்ன பதில்: "எங்களுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை.'' மேலும் ஒரு ஆய்வாளர் இதை உறுதிபடுத்துகின்றார்:

தூண்டில் போட்டு பொழுது போக்கிற்காக மீன் பிடிக்கும் நபர்களுக்கும் மேற்கண்ட உண்மை பொருந்தும். நம்பிக்கையோடு தூண்டில் போடுபவரையும், வலை வீசுபவர்களையும் மீன்கள் நாடிச்செல்கின்றன. அவர்களின் எண்ண ஓட்டம் அவைகளை வசீகரிக்கின்றன. மனோசக்தி நிகழ்த்தும் விந்தையே இது.

மாபெரும் தத்துவமேதை, மண்டன மிச்ரர். மகத்துவம் மிக்க அருளாளர், ஆதிசங்கரர். இருவருக்கும் இடையே ஒருசமயம் ஒரு அறிவுப் போர் நடைபெற்றது.

வாதத்தில் தீர்ப்பு வழங்க வாணி தேவி இசைந்தாள். இருவரும் சரஸ்வதி தேவி வழங்கிய இரண்டு பூமாலைகளை கழுத்தில் அணிந்தபடி வாதம் செய்தனர். 'யாருடைய பூமாலை முதலில் வாடுகிறதோ அவரே தோல்வி அடைந்தவர் ஆவார்' என்றாள் கலைமகள்.

வாதம் தொடங்கியது. தொடர்ந்தது. முடிவைத் தொட்டது. ஆதிசங்கரர் வென்றார். அவர் மார்பில் போட்ட மாலை மலர்ச்சி சிறிதும் குன்றாமல் மணம் வீசியது. மண்டன மிச்ரர் தோற்றார். அவர் மாலை வாடிப் போனது.

புலமையை நம்பி வாதம் புரிந்த மண்டன மிச்ரர், நம்மைவிட ஆதிசங்கரர் திறன் மிக்கவரோ, அவர் வென்று விடுவாரோ என்று எண்ணி பதற்றப்பட்டார்.

பதற்றமும், தோற்று விடுவோமோ என்ற சந்தேகமும் உடலில் உஷ்ணத்தை ஏற்படுத்த மாலை வாடிப் போனது. பக்தியில் சிறந்த ஆதிசங்கரரோ ஆண்டவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் வாதம் புரிந்ததால் அவர் உடலில் எந்தவிதப் பதற்றமோ, மனதில் எந்த ஒரு கொந்தளிப்போ ஏற்படவில்லை.

முதலில் அணிந்ததுபோலவே மார்பிடையே மாலை புன்னகை புரிந்தது. திறமையுடன் நம்பிக்கையும் சேர்ந்தால் அவ்விடத்தில் வெற்றியும் வந்து விடும் என்று தீர்மானமாகச் சொல்லி விடலாம்.

ஒரு குடும்பத் தலைவி காலையில் எழுந்தபோது ஒரே களைப்பாக இருந்தாள். மலை மலையாக வீட்டு வேலைகள் குவிந்திருந்தன. துவண்டு போனாள்.

திடீரென்று அவள் நேசத்திற்குரிய தோழி நேற்று தந்த ஒரு மாத்திரையும், அவள் சொன்ன சொற்களும் நினைவில் வர அதைத்தேடி எடுத்து உட்கொண்டாள்.

'பத்தே நிமிடத்தில் அந்த மாத்திரை உனக்குள் மாற்றத்தை ஏற்படுத்தி சோர்வை எல்லாம் தூக்கி எறியும். புத்துணர்ச்சி தரும் என்று தோழி சொல்லியிருந்தாள். கொஞ்ச நேரத்தில் களைப்பு போனது. மளமள வென்று காரியங்களை முடித்து அலுவலகத்துக்குப் புறப்படும் போது தான் தன் கைப்பையில் தோழி தந்த மாத்திரை அப்படியே இருந்ததைக் கண்டாள். அவசரத்தில் அவள் விழுங்கியது தன் குழந்தை தந்த மிட்டாயைத்தான்!

இப்போது புரிந்திருக்குமே! சோர்வை எல்லாம் தூக்கி எறிந்து புத்துணர்ச்சி தருவது நம்பிக்கை தான் என்று!

# செய்தித்துளிகள்

## வாக்களிக்கச் சென்றவர் திடீர் உயிரிழப்பு

(பாணந்துறை)

பாணந்துறை - பெக்கேகம மகா வித்தியாலயத்துக்கு வாக்களிப்பதற்காக சென்றவர் திடீரென சுகயீனமுற்றதை தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் பாணந்துறையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனால் குறித்த வாக்களிப்பு நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

மேலும் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

## மரண தண்டனையை இரத்துச் செய்யுமாறு பிரேமலால் ஜெயசேகர மனுத்தாக்கல்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிரேமலால் ஜயசேகர மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது பிரசார கூட்டமொன்றில் துப்பாக்கிச் சூட்டினை நடத்தி ஒருவரை கொலை செய்ததோடு மேலும் இருவருக்கு காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக பிரேமலால் ஜயசேகரவிற்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் கடந்த வாரம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்நிலையில் அந்த தீர்ப்பினை இரத்து செய்யக் கோரியே அவரது சட்டத்தரணி இந்த மனுத் தாக்கலை செய்துள்ளார். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 150 | 250 |
| தக்காளி | 100 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 120 | 80 |
| கோவா | 120 | 120 | 130 | 150 |
| கரட் | 100 | 140 | 150 | 160 |
| பூசணி | 50 | 50 | 60 | 80 |
| புடோல் | 60 | 50 | 50 | 80 |
| வாழைக்காய் | 140 | 100 | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 120 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 180 | -- | 150 | 160 |
| பயற்றங்காய் | 60 | 50 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 90 | 80 | 120 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 90 | 120 |
| போஞ்சி | 150 | 240 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | -- | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60-70 | 55 | 60-80 |
| இராசவள்ளி | -- | 300 | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 160 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 50 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 70 | 60 |




## வெயிலும் நிழலும்

ஒருநாள் அக்பர் ஏதோ ஒரு காரணத்திற்காக காலையிலிருந்தே கோபமாக இருப்பதைக் கவனித்தார் பீர்பால்.

அவருடைய கோபத்தைத் தணிக்க விரும்பிய பீர்பால் மன்னா, நீங்கள் சிடுசிடுவென்று இருந்தால் இயற்கையில் அழகான உங்கள் முகம் விகாரமாக மாறிவிடுகிறது என்றார்.

பீர்பாலை இடைமறித்த அக்பர் என்ன தைரியம் இருந்தால் என்னை சிடு மூஞ்சி என்பாய். இனி உன் முகத்தில் விழிக்க நான் விரும்பவில்லை. எங்கேயாவது கண்காணாத இடத்திற்கு ஒழிந்து போ என்றார்.

அதனால் பீர்பால் தலைநகரை விட்டு வேறு நகருக்கு இடம்பெயர்ந்தார். இதை அறிந்த அக்பர் பீர்பால் உண்மையாகவே சென்றுவிட்டதை எண்ணி மனம் வருந்தினார்.

பீர்பாலை மீண்டும் சந்திக்க வேண்டும் என்று அவர் மனம் துடித்தது. அக்பருக்கு ஒரு யோசனை தோன்றியது.

உடனே அவர் மந்திரியை அழைத்து மந்தியாரே, கொழுத்தும் வெயிலில் குடையின்றி ஒருவன் வீதியில் நடந்து வர வேண்டும். அப்படி வருபவனுக்கு நூறு பொற்காசுகள் தரப்படும் என்று இராஜ்ஜியம் எங்கும் தண்டோரா போடுங்கள் என்றார்.

அக்பரின் விருப்பப்படி இராஜ்ஜியம் எங்கும் தண்டோரா போட்டு அறிவித்தார்கள்.

அக்பரின் தலைநகருக்கு அருகேயிருந்த ஒரு சிறிய கிராமத்தில் வசித்துவந்த ஒரு பரம ஏழை இந்தச் செய்தியைக் கேட்டு சந்தோசப்பட்டான்.

ஒரே சமயத்தில் நூறு பொற்காசுகள் கிடைக்கும் என்ற அறிக்கை அவன் ஆசையை அதிகமாக்கியது.

அவன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரனான வீரேந்திரன் மிகவும் புத்திசாலி. அவனிடம் சென்று யோசனை கேட்டான்.

அதற்கு அவனிடம் நீ, ஒரு நாற்காலியை தலையின் மேல் சுமந்து சென்றால் உன்மேல் வெயில் படாது என்றான்.

மறுநாள் அவன் ஒரு சிறிய நாற்காலியை தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு கால்நடையாகவே அக்பரின் தர்பாரை அடைந்தான்.

அக்பர் அவனைப் பார்த்து சபாஷ், யாருக்குமே தோன்றாத இந்த யோசனை உனக்கு மட்டும் எப்படித் தோன்றியது என்று கேட்டார்.



எனக்கு இந்த யோசனையைச் சொல்லியது என் பக்கத்து வீட்டுக்காரனான வீரேந்திரன் என்றான்.

நான் அறிவித்த படியே உனக்கு நூறு பொற்காசுகள் தருகிறேன். அந்தப் பணத்தை உன் கிராமத்திற்கு பத்திரமாக எடுத்துச் செல்வதற்காக உன்னுடன் இரு காவலர்களை அனுப்பி வைக்கிறேன் .

நீ உன் வீட்டை அடைந்ததும் அந்தப் புத்திசாலி வீரேந்திரனை காவலர்களிடம் ஒப்படைத்துவிடு என்றார்.

அந்த ஏழை வீட்டை அடைந்தவுடன் அக்பர் சொன்னபடியே வீரேந்திரனைக் காவலாளிகளிடம் ஒப்படைத்துவிட்டான்.

தர்பாரில் நுழைந்த வீரேந்திரன் தன் முகத்தை ஒரு பையால் மூடிக் கொண்டு வந்தான். வீரேந்திரா உன் முகத்தை ஏன் மூடிக் கொண்டிருக்கிறாய். பையை அகற்று என்றார் அக்பர்.

மன்னா, நான் வீரேந்திரன் இல்லை. நான்தான் பீர்பால். உங்கள் முகத்தில் நான் இனி விழிக்கக்கூடாது என்ற உங்களின் கட்டளைப்படி நடக்கிறேன் என்றான்.

பீர்பால், உன் முகத்தை நான் இப்போதே பார்க்க விரும்புகிறேன். இது என் கட்டளை என்றுகூறிக்கொண்டே அக்பர் பீர்பாலின் முகத்தில் இருந்த பையை விலக்கினார்.

பீர்பாலின் முகத்தைப் பார்த்த அக்பர் மிகுந்த பிரியமுடன் கட்டித் தழுவிக்கொண்டார்.

**நீதி: வித்தியாசமாக யோசித்துச் செயற்பட வேண்டும். மேலும் அதில் நீ யார்? என்பதை அடையாளம் காட்டவும் செய்யும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்

(28)

கலமறுத்தளி என்பதை சேரர்களின் கப்பல்களை அழித்து அதாவது சேரர்களின் கடற்படைப் பலத்தைத் தகர்த்து என்று பொருள் கொள்ளலாம். கலம் என்றால் கப்பல்.

சேரநாடுகளின் எல்லைப் பகுதியில், திருவனந்தபுரம் அருகேயுள்ள கடற்கரை நகரமான காந்தளூர்ச்சாலையிலிருந்த சேரர் கடற்படையை ராஜராஜன் அழித்ததால் இந்தப் போருக்கு காந்தளூர் கலமறுத்தளி என்று பெயர்.

இதுதவிர, கலம் என்றால் வில்லங்கம் என்று ஒரு பொருள் உண்டு. காந்தளூரில் உள்ள ஏதொவொரு வில்லங்கத்தை ராஜராஜன் போக்கியுள்ளார். அதனால் காந்தளூர் கலமறுத்தளி என்று பெயர் விளக்கம் சொல்லப்படுகிறது.

இப்படி இன்றுவரையிலும் காந்தளூர்ச்சாலை கலமறுத்தளி என்பதன் அர்த்தம் குறித்து பல்வேறு விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன.



காந்தளூர்ச்சாலை எங்கிருந்தது என்பதில் சில கருத்து வேற்றுமைகள் உள்ளன. விழிஞம்- நெய்யாற்றின் கரையின் உள்ள இடத்தின் பெயர்தான் காந்தளூர்ச்சாலை என்று ஒருதரப்பும் திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயிலின் அருகேயுள்ளது தான் அது என்று இன்னொரு தரப்பும் இது குறித்து வெவ்வேறு தகவல்களைத் தெரிவித்துள்ளன.

காந்தளூர்ச்சாலை என்பது சேரநாட்டின் கடற்கரையையொட்டிய ஓர் இடம் 'வேலை கொண்டதும் விழிஞம் அழித்ததும் சாலை கொண்டதும் தண்டு கொண்டு அல்லவோ' என்ற கலிங்கத்துப்பரணிப் பாடல் வரிகள் உள்ளன.

விழிஞம் என்பது கடற்கரையில் அமைந்திருந்த துறைமுக நகரம் என்பது இதன்மூலம் அறியப்படுகிறது. எனவே, பாண்டிய, சேர நாடுகளின் எல்லைப் பகுதியில், திருவனந்தபுரம் அருகில் கடற்கரையில் காந்தளூர்ச்சாலை இருந்திருக்க வேண்டும் என்பது பெரும்பான்மையானவர்களின் முடிவாக இருக்கிறது.

கல்வெட்டாராய்ச்சியாளரான கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை தன் தரப்பில் ஒரு கருத்தைச் சொன்னார். விழிஞம் அருகே இருந்திருக்கக் கூடிய ஒரு வேத பாடசாலைதான் காந்தளூர்ச்சாலை என்றார்.

காந்தளூர்ச்சாலையில் இராணுவப் பயிற்சி நிலையம் ஒன்று இருந்திருக்க வேண்டும். குமரி மாவட்டத்தின் கேரள மாநில எல்லைப் பகுதியில் அமைந்துள்ள பார்த்திவசேகரபுரம் என்ற ஊரில் கல்விச்சாலை ஒன்று இருந்தது.

இந்தப் பாடசாலை 95 சட்டர்களுக்கு (பிராமண மாணவர்களுக்கு) ''த்ரை ராஜ்ஜிய வ்யவஹாரம்' எனப்படுகிற மூவேந்தர் ஆட்சிப் பகுதிகளின் நிர்வாகம் குறித்த கல்விப் பயிற்சியும் வழங்குகிற கல்விச்சாலை.

இது, காந்தளூர்ச்சாலையை முன்மாதிரியாகக் கொண்டு செயல்படுகிறது என்கிறது பார்த்திவ சேகரபுரம் செப்பேடு (கி.பி 866).

(தொடரும்)

கண்ணில்லாத கழுகு வெறும் சிறகு கொண்டு பறக்க முடியாது. ஞானக் கண்ணில்லாத வாழ்வு அத்தகையது.
*– பகவத் கீதை*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் முடிவுகளுக்கு முன்பான கற்பனை கணக்கு

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நேற்றைய தினம் நடந்தாயிற்று.

கொரோனா தொற்றின் அபாயம் காரணமாக தேர்தலை நடத்தி முடிப்பதில் பல்வேறு இடர்பாடுகளும் இடைஞ்சல்களும் ஏற்பட்டிருந்தன.

இதனால் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான திகதிகளை நிர்ணயம் செய்வதும் பின்னர் அவற்றை ஒத்திவைப்பதுமான சம்பவங்களும் நடந்தாகின.

இருந்தும் நேற்று ஒகஸ்ட் ஐந்தாம் திகதி பொதுத் தேர்தல் என அறிவித்ததன் பிரகாரம் தேர்தல் அமைதியாகவும் சுமுகமாகவும் நடந்து முடிந்துள்ளது.

அதேநேரம் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் நடைமுறைகளும் வாக்களிப்பு நிலையங்களில் மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன.

இனி தேர்தல் முடிவுகளுக்கான காத்திருப்பு மட்டுமே பாக்கியாக உள்ளது. தேர்தல் முடிவுகளும் இன்றைய தினம் வெளியாகிவிடும்.

அதன்பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் யாவர் என்ற விபரங்களும் கிடைத்துவிடும். இவை ஒரு சீரொழுங்கில் நடைபெறும்.

அதேநேரம் வாக்குகளை எண்ணுகின்ற பணிகளும் அவற்றைப் பதிவேற்றம் செய்வதுமான செயல் ஒழுங்குகள் நேர்மையாகவும் உண்மையாகவும் நடப்பதை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உறுதி செய்வது அவசியம்.

இவை ஒருபுறமிருக்க, வாக்களிப்பு எப்படி? வெற்றியின் முதல் இடத்தை பிடிக்கக் கூடியவர்கள் யாவர் என்ற கேள்விகள் நமக்குள் எழுந்த வண்ணம் இருக்கவே செய்யும்.

வாக்குகளை எண்ணினால் மட்டுமே சரியான முடிவை அறிய முடியும் என்றாலும் நாம் சந்தித்தவர்கள், கதைத்தவர்கள் என்ற ஒரு சிலரின் தகவல்களோடு கட்சிகளுக்கும் சுயேட்சைக்குழுக்களும் கிடைக்கக்கூடிய ஆசனங்கள் எத்தனை என்பது தொடர்பான ஊகங்களும் வெளிவரவே செய்யும்.

இங்கு யார் எந்தப் பக்கம் சார்ந்து நிற்கிறாரோ அவர் தன் தரப்பே வெற்றி பெறும் என்பதான கருத்தை வெளிப்படுத்துவார்.

இவ்வாறு வெளிப்படுத்துவது அவரவரின் சொந்த அபிப்பிராயமாக இருப்பினும் அரசியல்வாதிகளை எப்படிச் சமாளிப்பது என்ற விடயத்தில் நம் மக்கள் கடும் தேர்ச்சி பெற்றிருப்பதாலும் அளவுக்கதிகமான கற்பனைக்குள் மதிப்பிட்டு எண்ணிக்கைகள் அடங்கி விடுகின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# மக்களுக்காக குரல் கொடுக்கும் பிரதிநிதிகளே இம்முறை தேர்தலில் வெற்றியடைய வேண்டும்

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்காக குரல் கொடுக்கும் பிரதிநிதிகள் மாத்திரமே இம்முறை பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பஞ்சிகாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கினைப் பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவேற்றிய அநுர, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிடடுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "குடும்ப ஆட்சியை மக்கள் தமது வாக்குகளால் தோல்வியடையச் செய்து, மக்களுக்காக குரல் கொடுக்கும் பிரதிநிதிகள் மாத்திரமே இம்முறை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட வேண்டும்.

மேலும் கடந்த தேர்தலை விட இம்முறை எம்மால் அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அத்துடன் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதோடு மாத்திரமின்றி, அரசாங்கத்தின் தேவைக்கேற்ப செயற்படாது தமக்குரிய அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்தி நீதியானதும் அமைதியானதுமான தேர்தலை நடத்தியதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# மாகாணசபை தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவிக் காலம் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நிறைவு பெறும். ஆகவே மாகாண சபைத் தேர்தலை இவ்வருட இறுதியில் நடத்துவது சாத்தியமற்றது என் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி புதிய பாராளுமன்றம் கூடும்.

புதிய பாராளுமன்றம் கூடியவுடன் முன்னெடுக்க வேண்டிய முககிய விடயங்களுக்கு இம்மாதம் முழுவதும் சென்றுவிடும்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தும் போது பல சட்டச் சிக்கல்கள் தேர்தல் திருத்த முறைமையின் ஊடாக ஏற்படும்

இவ்வாறான நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின பதவிக் காலம் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி யுடன் நிறைவு பெறும்.

ஆகவே தேர்தல் சட்டஙகளில் தவறுகளைத திருத்திக் கொள்ளாமல் மாகாணசபை தேர்தலை வருட இறுதியில் ஒரு போதும் நடத்த முடியாது என்றும் கூறினார். (ம-3)

# பெரும்பான்மையை பெறும் வழி எங்களுக்குத் தெரியும்-மகிந்த


(கொழும்பு)

ஆளும்கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பானமை கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. அப்படி கிடைக்காத பட்சத்தில் அதனை பெற்றுக் கொள்ளும் வழி எங்களுக்கு தெரியும் என தெரிவித்துள்ளார் மகிந்த ராஜபக்ச. நேற்றையதினம் தேர்தலில் வாக்களித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளும்கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பானமை கிடைக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர் பாராளுமன்றத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் எனவும் தெரிவித்துள்ளார். இதே வேளை தேர்தலில் மூன்றில் இரண்டு கிடைக்காவிட்டால் அதனை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் எனவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ம-3)

## திருவள்ளுவரின் நாவிலிருந்து

### கடும் முயற்சி விதியை வெல்லும்



வானிலிருந்து பெய்யும் மழையே இவ்வுலக மக்களுக்கு வாழ்வளிக்கிறது. மக்களின் உயிரைக் காக்கும் மழைநீர் அமுதம் போன்றதாகும். இத்தகைய மழைநீர் இல்லாவிட்டால் பூவுலகில் சிறு பசும்புல்லினைக் கூடப் பார்க்க முடியாது.


நேராக இருக்கும் அம்பு, பிறருக்கு கொடிய காயத்தைத் தரும். வீணை வளைந்திருக்கும். ஆனால் தன்னை மீட்டி மகிழ்பவர்களின் செவிகளுக்கு இனிய இசையை கொடுக்கும். அதனால் ஒருவரது உருவத்தை வைத்து மட்டும் குணத்தைக் கணிக்கக் கூடாது. அவர்களது செயல்களை வைத்தே முடிவு செய்ய வேண்டும்.

விதி என்று ஒன்று இருக்கிறது. அதை கண்டு சோர்ந்து விடாமல், மாற்றியமைக்க இயன்ற அளவு முயற்சிக்க வேண்டும். ஆனால், பெயரளவில் முயற்சி இருந்தால் அதனால் பயனேதும் இல்லை. பெருமுயற்சி வேண்டும். அப்படி முயற்சிப்பவன் செய்பவன், விதியையும் வெல்லும் திறம் பெற்றிருப்பான்.

நாம் பேசும் சொற்கள் பொருளுடையதாக இருக்க வேண்டும். பொருளுடைய சொற்களால் பயனுண்டாகும். பயனற்ற வீணான சொற்களைப் பேசுபவன் தன் வாழ்நாளை வீணாக்குபவன் ஆவான். அப்படிப்பட்ட ஒருவனை மக்களுள் பதடி (பயனற்றவன்) என்றுதான் அழைக்க வேண்டும்.

## சத்திய தரிசனம்

### துடிப்புடன் செயற்படுங்கள்



❖ நாம் கடவுளிடம் இருந்து வந்தவர்கள். அதனால், கடவுளை அடையும் வரை உண்மையான மகிழ்ச்சியைப் பெற முடியாது.

❖ ஏமாற்றமோ, துன்பமோ நேரும்போது மனம் ஒடிந்து போகாதீர்கள். அந்த துன்பத்திலிருந்து மீள்வதற்கான முயற்சியில் துடிப்புடன் செயறபடுங்கள்.

❖ ஏழை மக்களிடம் அன்பு காட்டுங்கள். ஏழைகள் மீது இரக்கம் கொள்ளுங்கள். அவர்களின் உடல்நலமும், மனபலமும் உயர்வதற்குரிய பணிகளில் ஈடுபடுங்கள்.

❖ குறைவான சுமை இருந்தால் ரயில் பயணம் நிறைவான சுகத்தை தரும். அதுபோல, ஆசையைக் குறைத்துக் கொண்டால் நிம்மதி நிலைக்கும்.

❖ குற்றங்குறை இல்லாத மனிதன் யாருமில்லை. துன்பக் கலப்பு இல்லாத இன்பமும் உலகில் இல்லை. அதனால் பற்றற்ற தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

❖ தடைகளைச் சந்திக்க நேர்ந்தால் தைரியத்துடன் எதிர்கொள்ளுங்கள். அவை உங்களை இறுக வைத்து உறுதித் தன்மையை கொடுக்க வல்லது.


# ஐ.பி.எல்.ரைட்டில் ஸ்பொன்சரிலிருந்து வெளியேறியது விவோ

சர்ச்சை எழுந்த காரணத்தால் ஐ.பி.எல்.ரைட்டில் ஸ்பொன்சரில் இருந்து சீனாவின் விவோ நிறுவனம் வெளியேறியுள்ளது.

பி.சி.சி.ஐ.,ஐ.பி.எல்.இருபது-20 லீக்கை நடத்தி வருகிறது. 2022 வரை சீன நிறுவனமான விவோ ஐ.பி.எல்.ரைட்டில் ஸ்பொன்சரை பெற்றிருந்தது. இதனால் வருடத்திற்கு சுமார் 400 கோடி ரூபாய் வரை பி.சி.சி.ஐ.இற்கு வருமானம் கிடைக்கும்.

லடாக் மோதலுக்குப் பிறகு சீனப் பொருட்களையும் சீன நிறுவனங்களையும் புறக்கணிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகிறது.

ஆனால் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஐ.பி.எல். ஆட்சி மன்றக்குழுவில் ஐ.பி.எல். ரைட்டில் ஸ்பொன்சராக விவோ தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது.




இதனால் ரசிகர்கள் கடும் கோபத்தை வெளிப்படுத்தினர்.

டுவிட்டரில் 'BoycottIPL' என ஹாஸ்ரக் உருவாக்கி எதிர்ப்பைத் தெரிவித்தனர். மேலும், அரசியல் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஐ.பி.எல்.ரைட்டில் ஸ்பொன்ரில் இருந்து விவோ விலகியுள்ளது. இது பி.சி.சி.ஐ. இற்கு மிகப்பெரிய அளவில் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (4)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்-2020 ஓல்ட்கோல்ஸ் அணி முன்னிலையில்



யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 11 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2020 இலிருந்து 31.07.2020 வரை நடைபெற்ற 19 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ஸ் அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றியும் ஒரு போட்டியில் முடிவுற்றும் 3 போட்டிகளில் தோல்வியும் அடைந்து 33.97 புள்ளிகளைப் பெற்று முன்னிலையிலும் சென்றலைட்ஸ் அணி 22.79 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்திலும் AB அணி 20.98 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்திலும் உள்ளன.

மேலும் இம்மாதம் நடைபெறவுள்ள போட்டி முடிவுகள் மாத இறுதியில் வெளியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

# மகளின் பிறந்த தினத்தில் பாடல் பாடி அசத்திய பிராவோ

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஓல்-ரவுண்டர் டுவெயின் பிராவோ தனது மகளின் 16 ஆவது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடினார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர் டுவெயின் பிராவோ. வேகப்பந்து வீசு ஓல்-ரவுண்டரான ஐபிஎல் லீக்கில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

இவர் இசை மீது அதிக ஆர்வம் கொண்டவர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காகப் பல பாடல்களை உருவாக்கியுள்ளார். சம்பியன்ஸ் பாடல் மிகவும் பிரபலம் அடைந்தது. அண்மையில் டோனியின் பிறந்த நாளையொட்டி ஒரு பாடலை உருவாக்கியிருந்தார்.

இந்நிலையில் அவரது மகள் வெய்னிஸின் 16 ஆவது பிறந்த நாள் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது பிராவோ சம்பியன்ஸ் பாடலைப்பாடி அசத்தினார். மேலும் அவர் பாடல் பாடிய காணொளியை சென்னை சுப்பர் கிங்ஸ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# இங்கிலாந்து மண்ணில் அயர்லாந்து வெற்றி



இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது இறுதியுமான ஒருநாள் போட்டியில், அயர்லாந்து அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், 2-1 என இங்கிலாந்து அணி தொடரை கைப்பற்றினாலும் இறுதிப்போட்டியின் வெற்றி அயர்லாந்து அணிக்கு சற்று ஆறுதலை அளித்தது.

சவுத்தாம்ப்டன்- ரோஸ் பவுல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 49.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 328 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஓய்ன் மோர்கன் 106 ஓட்டங்களையும் டொம் பென்டோன் 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அயர்லாந்து அணியின் பந்துவீச்சில், கிரைஜ் யங் 3 விக்கெட்டுகளையும் ஜோசுவா லிட்டில் மற்றும் கர்டிஸ் கெம்பர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மார்க் அடாயர் மற்றும் கரேத் டிலேனி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 329 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அயர்லாந்து அணி, 49.5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை அடைந்தது. இதனால் அயர்லாந்து அணி 7 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது.

இதன்போது அயர்லாந்து அணி சார்பில், போல் ஸ்டெயர்லிங் 142 ஓட்டங்களையும் என்ரிவ் பால்பிரையன் 113 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், டேவிட் வில்லே மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, போல் ஸ்டெயர்லிங் தெரிவுசெய்யப்பட்டார். தொடரின் நாயகனாக டேவிட் வில்லே தெரிவு செய்யப்பட்டார். (4)

# 2011 உலகக்கோப்பை போட்டிவரை டோனி என் மீது நம்பிக்கை வைத்திருந்தார்

## யுவராஜ் புகழாரம்



"2011 ஆம் ஆண்டு உலக கோப்பைப் போட்டி வரை டோனி என் மீது நிறைய அதிக நம்பிக்கை வைத்திருந்தார்' என்று முன்னாள் வீரர் யுவராஜ்சிங் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு உலக கோப்பையைக் கைப்பற்றிய இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்ததுடன் தொடர்நாயகன் விருதையும் பெற்ற அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ்சிங், அந்த போட்டி முடிந்ததும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு 19 மாத இடைவெளிக்கு பிறகு மறுபிரவேசம் செய்தாலும் அவரால் முன்பு போல் ஜொலிக்க முடியவில்லை.

இதனால் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கு பிறகு இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட அவர் கடந்த ஆண்டு (2019) ஜூன் மாதத்தில் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றார். 38 வயதான யுவராஜ்சிங் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது.

இந்திய அணிக்கு நான் மீண்டும் திரும்பிய போது விராட் கோலி எனக்கு ஆதரவு அளித்தார். அவருடைய ஆதரவு இல்லாமல் இருந்திருந்தால் என்னால் இந்திய அணியில் மறுபடியும் இடம் பிடித்திருக்க முடியாது. 2019 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டி குறித்து உண்மையான நிலைமையை டோனி எனக்கு உணர்த்தினார்.

அந்த உலகப்போட்டிக்கு தேர்வாளர்கள் எனது பெயரைப் பரிசீலிக்கவில்லை என்பதை எனக்குப் புரிய வைத்தார். அவரால் என்ன செய்ய முடியுமோ அதனை செய்தார்.

2011 ஆம் ஆண்டு உலக கோப்பைப் போட்டி வரை டோனி என் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார். 'நீங்கள் அணியின் முக்கியமான வீரர்' என்று அடிக்கடி சொல்வார். ஆனால் உடல் நலக்குறைவில் இருந்து மீண்டு வந்த பிறகு அணியில் நிறைய விடயங்கள் மாறியிருந்தன.

ஒரு கப்டனாக சில நேரங்களில் உங்களால் எல்லாவற்றையும் நியாயப்படுத்த முடியாது. இறுதியில் ஒரு அணியாக நாம் எப்படி செயற்படுகிறோம் என்பதை பார்க்க வேண்டும். ஒவ்வொரு கப்டனும் ஒரு சில வீரர்களுக்கு ஆதரவு அளிக்கலாம். ஆதரவு கொடுக்காமலும் இருக்கலாம். அது அவர்களின் தனிப்பட்ட விருப்பமாகும்.

சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தடுமாறிய போது டோனி அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார். இதேபோல் லோகேஷ் ராகுலுக்கு விராட் கோலி ஆதரவாக இருந்து இருக்கிறார். புற்றுநோயில் இருந்து மீண்டு களம் திரும்பிய போது என் மீது நம்பிக்கை வைக்காததற்காக நான் யாரையும் குறை சொல்லமாட்டேன். ஏனெனில் எனது ஆட்டத்தின் மீது முன்பு இருந்த நம்பிக்கை வருவதற்கு எனக்கே சில காலம் பிடித்தது.

பஞ்சாப் அணிக்கு ஆலோசகராகப் பணியாற்ற இருப்பதை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறேன். பஞ்சாப் அணி வீரர்கள் இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்று விரும்புகிறேன் என அவர் மேலும் கூறினார். (ஐ)

## யாழில் அமைதி...

எவ்வித வன்முறைகளுமின்றி அமைதியான முறையில் நிறைவடைந்துள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிறைவு பெற்ற பின்னர் வாக்குப்பெட்டிகள் யாழ்ப்பாண தேர்தல் மத்திய நிலையத்திற்கு எடுத்து வரப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், "வாக்களிப்பு காலை 7 மணிக்கு ஆரம்பித்து மாலை 5 மணிவரை இடம்பெற்று நிறைவடைந்துள்ளது. எந்தவித அசம்பாவிதமுமின்றி தேர்தலானது மிகவும் அமைதியான முறையில் இடம் பெற்றுள்ளது.

எந்தவித வன்முறைச் சம்பவமும் பதிவாகவில்லை. அத்தோடு கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது இம்முறை அதிகளவான வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது. அதாவது 67.72% வாக்களிப்பு பதிவாகியுள்ளது" என்றார். (ம-3)

## 70% வாக்குப்...

தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், பாராளுமன்றத் தேர்தல்களில் பாரியளவிலான தேர்தல் மீறல்கள் எதுவும் பதிவாகவில்லை எனக் கூறினார்.

இருப்பினும் சில சிறிய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார். (ம-3)

## முல்லையைச்...

கனடாவில் குடும்பத்துடன் வசித்து வந்த முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் குறித்த குடும்பஸ்தர் எரிபொருள் நிலையத்துக்குச் சென்றுள்ள நிலையில் அவருடைய காரில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ராஜகோபால் ரகு (வயது - 33) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (ம-3.60)

## வன்முறையற்ற...

பெரிய வன்முறைகள் எதுவும் நடைபெறவில்லை.

நாடு முழுவதும் வாக்களிப்பு சுமுகமாக இடம்பெற்றது.

காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுகாதார நடைமுறையுடன் வாக்களிப்பு நடைபெற்றது.

அனைத்து வாக்காளர்களும் முகக்கவசம் அணிந்தவாறே சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து வாக்களிப்பு நிலையங்களில் வரிசையாக நின்று தமது வாக்குகளைச் செலுத்தினர். (ம-3)

## 74.27%...

பாணத் தேர்தல் தொகுதியில் 74.27 சதவீத வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளதாக யாழ்ப்பாணத் தேர்தல் மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் தொகுதிகள் ரீதியான வாக்குவீத விபரங்கள் வருமாறு:- ஊர்காவற்றுறை - 74.28 வீதம், வட்டுக்கோட்டை - 70.37 வீதம், காங்கேசன்துறை - 48.52 வீதம், மானிப்பாய் - 69.80 வீதம், கோப்பாய் - 66.08 வீதம், உடுப்பிட்டி - 64.55 வீதம், பருத்தித்துறை - 69.71 வீதம், சாவகச்சேரி - 66.41 வீதம், நல்லூர் - 70.66 வீதம், யாழ்ப்பாணம் - 74.27 வீதமாகவும் வாக்களிப்பு பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாணத் தேர்தல் மத்திய நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3,18)

## வாக்குகள் எண்...

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் நடைபெற்ற மேற்படி 9ஆவது பாராளுமன்றத் தேர்தல் வன்முறைகள் அற்ற தேர்தலாகவும் பதிவாகியுள்ளது.

நேற்றுக் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த வாக்களிப்பு நடவடிக்கைகள் நடைபெற்றிருந்தன.

நாடு முழுவதும் 12 ஆயிரத்து 985 வாக்களிப்பு நிலையங்களில் நேற்றைய தினம் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்த முறை பாராளுமன்றத் தேர்தலுக்காக 7452 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

2019ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம், ஒரு கோடியே 62 லட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

196 மக்கள் பிரதிநிதிகள் இந்த தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்படவுள்ளதுடன், எஞ்சிய 29 வேட்பாளர்கள் தேசியப் பட்டியல் ஊடாக தெரிவாகவுள்ளனர். (ம-3)

## சாவகச்சேரியில்...

சாவகச்சேரி நகர சபை தவிசாளர் சிவமங்கை இராமநாதனின் கணவர் இராமநாதன் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு வாக்களிக்கச் சென்றிருக்கின்றார்.

அங்கு அவர் ஏற்கெனவே வாக்களித்ததாக பதிவாகியிருப்பதாக அங்கிருந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இருப்பினும் குறித்த நபருக்கு கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டு வழங்கப்பட்டு வாக்களிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவ ருடைய பெயர் வாக்களிப்பு நிலையத்தில் உள்ள அலுவலரின் பதிவில் வெட்டப்பட்டுள்ள அதேவேளையில் அங்கிருந்த கட்சி முகவர்களின் பதிவுப் புத்தகங்களிலும் ஏற்கெனவே வாக்களித்து விட்டார் என பெயர் வெட்டப்பட்டிருந்தமை பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஏமாற்றமடைந்தவர் சாவகச்சேரி நகர சபைத் தவிசாளரின் கணவன் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஏற்கெனவே அடையாளம் இடப்பட்டுள்ளமையால் இவருடைய ஆளடையாளம் பரிசீலிக்கப்பட்டது. அப்போது அவர் ஏற்கெனவே வாக்களிக்கவில்லை எனத் தெரியவந்ததில் சட்டத்தில் உள்ளவாறு கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டினை சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் வழங்கி உள்ளார். இது தொடர்பில் கட்சி முகவர்கள் எந்த ஆட்சேபனையும் எழுப்பவில்லை. கண்காணிப்பு அமைப்பு ஒன்றின் அலுவலர் ஒருவரும் அங்கு கடமையில் இருந்துள்ளார்.

சட்ட ரீதியாக சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் சரியான நடவடிக்கை எடுத்துள்ளார். இந்தத் தீர்மானத்தில் ஐயம் இருப்பின் ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்றத்தை நாட முடியும் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார். அத்துடன் கேட்டுப் பெறும் வாக்குச்சீட்டு எண்ணப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவத்தால் சிறிது நேரம் வாக்களிப்பு நிலையத்தில் பதற்றம் ஏற்பட்டு தணிந்ததுடன், சில கட்சிப் பிரமுகர்களும் அங்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,30)

## இறுதி நேரத்தில்...

நிலையத்துக்கு வருகை தந்து வாக்களித்து, தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றியுள்ளார்.

வீரவில குடாகம்மான இலக்கம் 7இல் அமைந்துள்ள அபயபுர - சுரணிமல தொடக்கக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்துக்கு, நேற்று புதன்கிழமை மாலை 4.45 மணியளவில் தனது மனைவியுடன் வருகை தந்து வாக்களித்துள்ளார். (ம-3)

## வடக்கு - கிழக்...

வாக்களிப்பு விறுவிறுப்பாக இருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை போன்ற மாவட்டங்களில், சுமார் 67 தொடக்கம் 70 சதவீதம் வரையான வாக்காளர்களே வாக்களித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## இதுவே எனது...

பொதுத் தேர்தல் தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசுகையில்,

இது நான் பணியாற்றும் இறுதி தேர்தல், உயிருடன் இருந்தால் அடுத்த தேர்தலில் வாக்களிப்பேன். 37 ஆண்டுகள் நான் இங்கு பணியாற்றியுள்ளேன். 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி நான் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இணைந்தேன்.

1984 ஆம் ஆண்டு முதல் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளேன், நான் இவ் ஆணைக்குழுவில் செய்யாத பணிகள் இல்லை, வாக்கு பெட்டிகளையும் சுமந்து துள்ளேன். அனைவருக்கும் மிக நன்றி. நான் மீண்டும் இவ் இடத்திலிருந்து ஊடக சந் திப்பை மேற்கொள்ள மாட்டேன் என்றார். (ம-3)

## 421...

செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை காலை 6 மணி முதல் முற்பகல் 11 மணி வரையான காலப்பகுதியிலேயே 421 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளதாவது,

'நிறைவடைந்த பொதுத் தேர்தலில் இதுவரை 8025 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. (ம-3)

## சுய...

தாகக் கூறப்படுகிறது.

எனினும்லங்கா புர பிரதேச சபையின் தலைவர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மூன்று பேரும் தனிமைப்படுத்தப்படுவதற்காக உடனடியாக புனானை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக லங்காபுர பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது. (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05-08-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1043
வெற்றி இலக்கங்கள்
C 8 5 4 5 2 2
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/08/05
சீட்டிழுப்பு இலக்கம் 4205
வெல்லப்பட்ட இலக்கங்கள்
F 5 1 1 5 9 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 05-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2500
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Y 08 20 26 45
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 572
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
R 25 03 09 12 52

செவன
திகதி 05/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 284
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
D 01 11 19 33
NATIONAL LOTTERIES BOARD

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 355 திகதி 05.08.2020 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 15 23 39 விதி எண் 7
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,118,132
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1002
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.08.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,415,995/-
வெற்றி இலக்கங்கள் 09 17 31 61 ஆங்கில எழுத்து P
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3347 திகதி: 2020.08.05
ஊதா புதன்கிழமை
ශනිදා වාසනාව
வெற்றி இலக்கங்கள் 17 22 24 58 ஆங்கில எழுத்து K
அடுத்த சனிக்கிழமை ஜக்பொட் 35,528,669.50
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2883 வர்ணம் பச்சை திகதி 05.08.2020
வெற்றி இலக்கங்கள் 17 21 33 55 மீனம்
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 4,578,695
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

வாக்களித்த அனைவருக்கும் நன்றி

# முதலாவது தேர்தல் முடிவும் பிற்பகல் 2.30 மணிக்கு வெளிவரும்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



தமது வாக்கினை பதிவு செய்வதற்காக கோவிட் 19 தொற்று பரவலுக்கு மத்தியிலும் வாக்களிப்பு மத்திய நிலை யங்களுக்கு வருகை தந்த அனைத்து வாக்காளர் களுக் கும் விசேடமாக தனது நன்றி யை தெரிவித்துக் கொள்வதாக தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவில் நேற்றிரவு இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் முதலாவது முடிவு இன்று வியாழக்கிழமை பிற் பகல் 2.30 மணிக்கு வெளி யாகும்

தேர்தல் தொடர்பான அனைத்து முடிவுகளும் நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முழுமையாக வெளிவரும் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய வாக்குப்பதிவு மாலை ஐந்து மணிக்கு நிறை வுக்கு வந்தது. இதனையடுத்து வாக்குப்பெட்டிகள் வாக்கு எண் ணும் நிலையங்களுக்கு பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப் பட்டன என்றார் (ம-3)

# மாணவன் மீது கும்பல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோவில் வந்த 9 பேர் கொண்ட இனந்தெரியாத கும் பல் ஒன்றினால் தாக்கப்பட்ட நிலையில் கோப்பாயைச் சேர் ந்த மாணவன் ஒருவர் படுகாய மடைந்து யாழ். போதனா வை த்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் திருநெல் வேலி தபால்பெட்டிச் சந்திக் கருகாமையில் இடம்பெற்று ள்ளது

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3)

## மாவட்ட ரீதியான வாக்களிப்பு வீதம்

| மாவட்டம் | வீதம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 67.72% |
| கிளிநொச்சி | 71.52% |
| வவுனியா | 76.48% |
| முல்லைத்தீவு | 76.25% |
| மன்னார் | 76.48% |
| திருகோணமலை | 74% |
| மட்டக்களப்பு | 72% |
| அம்பாந்தோட்டை | 73% |
| நுவரெலியா | 75% |
| மொனராகலை | 74% |
| பதுளை | 74% |
| இரத்தினபுரி | 73% |
| கொழும்பு | 72% |
| திகாமடுல்லை | 72% |
| மாத்தறை | 71% |
| களுத்துறை | 71% |
| மாத்தளை | 71% |
| பொலன்னறுவை | 71% |
| கண்டி | 71% |
| அனுராதபுரம் | 71% |
| கேகாலை | 71% |
| கம்பஹா | 69% |
| குருநாகல் | 69% |
| காலி | 69% |
| புத்தளம் | 63% |

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளது

- **உதவி ஆசிரியர்கள்**
  (இருபாலாரும்)
  தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.
- **அலுவலகச் செய்தியாளர்கள்** (ஆண்கள்)
  (உள்ளகம், வெளியகம்)
  தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.
- **பக்க வடிவமைப்பாளர்கள்**
  (தமிழ் ரைப்பிங், விளம்பர வடிவமைப்பு உட்பட)
  தகைமை : க.பொ.த (சாதாரண தரம்)
- **ஒப்பு நோக்குநர்**
  (இருபாலாரும்)
  தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.

தகைமையும், விருப்பமும் உடையவர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தை தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ ஒப்படைக்கவும்.

குறிப்பு : யாழ். நகரை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முகவரி :- பொது முகாமையாளர்,
வலம்புரி,
இல. 3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-9624)
0768226240

சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழி யர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறு வனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அத ற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வ மான சேவை AAA Gold Center
076 568 4346 (C-995)

(3479)
2D-Drawing 3D-Modeling Civil & Mech
Auto CAD
LINK:077 5116320 - 071 8617972

FOR SALE
விற்பனைக்கு
1. Examination Bed (2)
2. M.G Model E.C.G Machine
3. Cera Gem Machine
(சூரிய ஒளிக்கதிர் சிகிச்சை மெசின்)
தொடர்பு (4395)
Dr: கண்ணா (சித்தன்கேணி)
077 602 8734

## பாடகர் எஸ்.பி.பிக்கு கொரோனா



(சென்னை)

கொரோனாவால் திரைப்பிரபலங்கள் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் பின்னணிபாடகர் எஸ். பி.பாலசுப்ர மணியம் (74) இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையா ளம், ஹிந்தி உள் ளிட்ட ஏராளமான மொழிகளில் 40 ஆயி ரத்திற்கும் அதிக மான பாடல்களை எஸ்.பி.பாலசுப்ரம ணியம் பாடி உள் ளார் (ம-3)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
புத்திசிகாமணி உதயராணி
(உதயம்)
திதி:06.08.2020 திருதியை
மனம் மகிழ 1960.07.02
மனம் நெகிழ 2020.07.20
தந்தையை இழந்த துயரம்-எமை வாட்டி வதைக்காத வண்ணம் குறையேதுமின்றி அன்பால் - எமை அரவணைத்து வளர்த்து ஆளாக்கிய எம் கோயிலே எம் வீட்டையே இருள் சூழவிட்டு எங்கு சென்றீர்கள் இன்றும் உங்கள் நினைவு எமை வாட்டுதம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
மத்தொனி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
(3478)
தகவல் குடும்பத்தினர்

விரைவு பொதிகள் சேவை



DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன
Lanka Cargo Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(3481)
021 221 1995
076 283 2397

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்
பிரான்ஸ் -ரூ.1500/ரூ.1300
ஜேர்மனி -ரூ.1500/ரூ.1300
டென்மார்க -ரூ.1500/ரூ.1300
கொலண்ட் -ரூ.1500/ரூ.1300
பெல்ஜியம் -ரூ.1600/ரூ.1300
இத்தாலி -ரூ.1700/ரூ.1450
லண்டன் -ரூ.1500/ரூ.1150
இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள்
எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
(C-9991)
லண்டன்-1000/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1500/=
சுவிஸ்- 1400/= அவுஸ்ரேலியா- 1600/= / 1000/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 075 5522999 076 1221566 | பளை மன்னார் கொழும்பு 12

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.